# சிரித்திரன்

மார்ச் 1982



**சிரித்திரன் சிந்தனை**

நாம் சந்திரனைத் தொட்டு விட்டோம் - ஆனால் அரிச் சந்திரனைவிட்டு வெகு தூ ரம் போய்விட்டோம்.




மகுடி: பாரதி நூற்றாண்டுத் தீர்மானம் என்ன?

விலை ரூபா: 2-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● உன்கணவர் கிரிக்கட் ஆட்டத்தில் அடுத்தடுத்து ஆறு 'சிக்ஸர்'கள் அடித்தாரே... அவரை எப்படி நீ கௌரவித்தாய்

☐ சுஜாதா நகைமாளிகையில் வைரக்கல் மோதிரம் ஆடர் செய்திருக்கின்றேன்.

மனோகரமான அழகின் ரகஸ்யம்

சுஜாதா வழங்கும் நகைகளே

# சுஜாதா ஜுவெல்லர்ஸ்

214, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

Prop: K. யோகேஸ்வரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன்

செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம்

நகை: 19 1982 சுவை: 02]


## பொன்னான பொழுது

எங்களுடன் பேசிக்கொண்டிருந்த அந்த யப்பானிய கட்டிடக்கலைஞர் திடீரென எழுந்து தரையில் ஓடித் திரிந்த எறும்புகளை உற்றுநோக்கினார். நான் அவரை "என்ன யப்பானில் எறும்பு இல்லையா... எறும்புகளைக் காணாதவன் மாதிரி அதிசயமாகப் பார்க்கிறீர்களே!'' என அவரைக்கேட்டேன். "இலங்கை எறும்புகளும் இலங்கையர்போல் சுறுசுறுப்பில்லையோ! எனப்பார்க்கிறேன்'' எனக் கிண்டல் சிரிப்புடன் பதில் அளித்தார்.


ஹிரோஷிமா நகரத்தில் விழுந்த நாசகார அணுக்குண்டால் அழிந்தநாடு இன்று அணுக்குண்டு போட்ட நாட்டோடு பொருளாதாரத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறதே என்றால் அவர்கள் நேரத்தை மதித்து சுறுசுறுப்பாக உழைத்தார்கள் என்பதே காரணம்.

நாம் நேரத்தை மதிப்பதில்லை. பணம்மட்டும் ஒரு நாட்டின் முதலாகாது. நேரமும் அந்நாட்டு முதல். நேரத்தை விரயம்பண்ணும் நாடு, தன் பணநெருக்கடியைச் சமாளிப்பதற்கு அந்நிய நாடுகளுக்கு உண்டியல் குலுக்கிப்போய் வரவேண்டியதுதான்

எமது அரசியல்வாதிகளே நேரத்தை அலட்சியம் பண்ணும்போது பொதுமக்களிடமிருந்து அந்தப் பண்பை எதிர்பார்க்கமுடியாது. குறிப்பிட்ட நேரத்திற்கு எமது அரசியல்வாதிகள் கூட்டங்களுக்குத் தரிசனம் தருவது மிகக்குறைவு. அவர்கள் குறிப்பிட்ட நேரம் கூட்டங்கள் வருகைதராததன் காரணத்தால் தான் குறிப்பிட்ட நேரம்வராத ரயில், பஸ்சேவையையும் அவர்கள் கண்டிப்பதில்லைப்போலும்.

மின்சார சக்தி தடைபட்டால் 'பொறுமை இழக்கும் நாம் மனிதசக்தி பஸ்நிலையத்திலும், ரயில் நிலையத்திலும் தடைப்பட்டிருப்பதைப் பற்றிப்பதட்டமடைவதில்லை.

திருவிழாக்களிலும், திருமணச் சடங்குகளிலும் மற்றும் கொண்டாட்டங்களிலும் நாம் பொன்னான நேரத்தைக் கரியாக்கிக் கொண்டிருக்கின்றோம். எமதுநாடு இன்று சிறுவர்களின் "நேசரி"யாகவும், வயோதிபர்களின்விடுதியாகவுமே இருக்கின்றது. எமது வாலிபர்கள் பிறந்த தாய்நாட்டில் வாழமுடியாது. பாலைவன நாடுகளிற்கும் பனிக்கட்டி உறையும் நாடுகளுக்கும் பணந்தேடப்போயிருக்கின்றார்கள்.



எமதுநாடு சுதந்திரநாடு. அந்நியனிடமிருந்து அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டு பொருளாதாரத்திற்கு அவனிடம் சரண்புகுவது சுதந்திரத்திற்குஅழகாகாது.

மகுடியின் பாணியில் கூறுகில் அந்நிய நாட்டில் இருந்து நேரம்காட்டும் கடிகாரத்தை இறக்குமதிசெய்யலாம். நேரத்தை இறக்குமதி செய்யமுடியாது. நேரத்தின் தத்துவத்தை உணர்ந்து நேரத்தைப் பொன் செய்து பிறந்த பொன்னுட்டை பொன்கொழிக்கச் செய்வோமாக.

## சிந்தனைச் சுனை

நபிகள் நாயகம் தமது மகள் பாத்திமாவுக்கு சீதனமாகக் கொடுத்தது ஒரு கைராட்டினமும், மாவரைக்கும் கல்லும்தான். எளிய வாழ்க்கைக்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு இருக்க முடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19-ஆண்டுப் பவனியில் சிரித்திரன்






பிற்பொக்கற் காரனுக்கு எமதர்மராஜனின் தண்டனை











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சித்ரகானம்






இது சர்க்கஸ் அல்ல, தமிழ் சினிமாத்துறையில்வரும் காதல்காட்சி.

## மைனர் மச்சான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடாளுமன்றத்தில் சிரித்திரன்

அன்பு சிரித்திரனுக்கு!

பெப்ரவரி 1982 சிரித்திரன் படித்தோம். வழக்கம்போல எங்கள் சிரித்திரன் வீடாளுமன்ற ஆய்வுக் கூடத்தில் விவாதத்துக்கு விடப்பட்டது. ஆளும்கட்சி, எதிர்க் கட்சி இரண்டு உதிரிக்கட்சிகள் அன்று கூடியது,

சிரித்திரன் சிந்தனையும், ஏற்றுமதியில் ஒரு திருப்புமுனை அட்டைப் படமும் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்து சித்திரவதை பற்றிய விவாதம் கடுமையாக இருந்தது. புஸ்தகம் கொப்பிக்கு உறைபோட்டாலும் எங்கள் மாணவசமுதாயம் இன்று சைனீஸ்சஞ்சிகையை உபயோகிக்கும் அளவுக்கு முன்னேறித்தான் இருக்கிறது என்று உதிரிக்கட்சிகள் விவாதத்தை சூடாக்கியது. எதிர்க்கட்சியும் அதை ஆதரித்து பேசியது. ஆளும்கட்சி குறுக்கிட்டு பெற்றோர்களின் போக்கைக் கண்டித்து பேசியதால் நிலைமை மாறியது. முடிவில் நிலைக்கண்ணாடியின் கருத்து ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

19ஆண்டு பவனிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மகுடி பதில்களில் முன்னையைவிட துணிகரம் அதிகரித்துஇருப்பது பற்றிமகிழ்ச்சியும் அத்தோடு அம்மா ஒருகட்சி பிள்ளை ஒருகட்சி, ஒருமந்திரியின் ராஜினாமா ஒரு எம். பி. யின் ராஜயோகமல்லவா?, பலன்தரா மரத்திற்கு பசளை போடலாமா, மூலிகை தேடப்போய் பாம்பிற்கு பலியானகதை, அரசாங்கம் றிம்மில் ஓடுகிறது என்று அர்த்தம் உள்ள பதில்கள் உதிரிக்கட்சிகளின் பாராட்டுதல்களைப் பெற்றன. தமிழ் சினிமாவில் சாவித்திரி சாஸ்வதமானவர் என்ற பகுதியை வாசிக்கும்போது சிரித்திரன் வீடாளுமன்ற ஆய்வுக்கூட சபை தன்னை மறந்து எழுந்து நின்று கண்ணீர் வடித்தது. கலகலப்பாக இருந்தசபை சிறிது நேரம் சோகஅமைதியாக இருந்தது.

இருகவிதையில் 'படி அளத்தல்' என்ற கவிதையை எதிர்கட்சி அங்கத்தவர் மிகவும் கடுமையாக எதிர்த்தார், ஆனால் ஆளும்கட்சி சூடானபதில் கொடுத்து சிலகுடும்ப நிகழ்ச்சிகளை நேரில்காட்டியதின் பேரில் எதிர்க்கட்சியும் ஒத்துக்கொண்டது. 'பரலோசுக ராச்சியம்......' கே, ஆர். டேவிட் அவர்கட்கும் விண்ணுலக சந்திப்பு அகளங்கன் அவர்கட்கும் பாராட்டுப் பத்திரங்கள் அனுப்புவதாகவும் சபை ஏகமனதாக முடிவுசெய்தது. செய்திமுறுவலில்பராசக்தியில்கலைஞர் கருணாநிதி எழுதிய வசனத்தை ரத்தக் கண்ணீரில் படத்தில் என தவறாக தெரிவித்தசிரித்திரனை ஒரு சினிமா கமிஷன்முன் நிறுத்தி விசாரனை நடத்தவேண்டும் என்று ஆளும்கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்கட்சியும் உதிரிக் கட்சிகளும் கூட்டாக கொமிஷன்முன் விசாரனை நடத்துவதை எதிர்த்தன. கமிஷனில் உள்ளவர்கள் ஏர்க்கனவே சிரித்திரனில் ஒருகண் வைத்திருப்பதாலும் அவர்கள் நீதியாகநடந்து கொள்ளமாட்டார்கள் என்பதால் இந்தச் சபையே சிரித்திரனை எச்சரித்து மன்னிக்கட்டும்எனப்பேசியதன் பேரில் சபை அதை ஏற்றுக்கொண்டது. இன்னும் ஒருசில விளம்பரங்களை சேர்த்துக்கொண்டால் என்ன என்றும், 25 சதம் இன்னும் கூட்டினால் சீராக சிரித்திரன் நடக்க உதவும் என்றும் உதிரிக் கட்சிகள் ஒரு கேள்வியை எழுப்பியது. ஆய்வுக்கூட நேரம் முடிந்துவிட்டபடியால் அடுத்த மாத கூட்டத்தொடரில் ஆலோசிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு வீடாளுமன்ற ஆய்வு நிகழ்ச்சிகள் முடிவுற்றது.

இப்படிக்கு

**இரா. பற்குணம்**

(சபை நிருபர்)

## சிரித்திரன் சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒருவருட சந்தா | 30-00 |
| ஆறுமாத சந்தா | 15-00 |

பணத்தை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ எஸ். சிவஞானசுந்தரம் என்ற பெயருக்கு அனுப்பிவைக்கவும்.

ஆ—ர்

வாங்கிவிட்டீர்களா!

முல்லை அமுதனின்

**நித்ய கல்யாணி**

(புதுக்கவிதைத் தொகுதி)

விபரங்கட்கு:

**இ. மகேந்திரன், ஞா. பா. சங்க வீதி, கல்வியங்காடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்



## ஒத்திகை

நித்திய தூக்கம்
நிரந்தர தூக்கத்துக்கு
ஒரு
ஒத்திகை

— அம்மைஅப்பன்

## நிலை

செடியில்
இருக்கும்வரை
தளிர்கள்
மலர்கள்
இலைகள்
கனிகள்
வாடி உதிர்ந்தபின்
எல்லாம்
சருகுகள்
சருகுகள்
சருகுகள்

— அம்மைஅப்பன்

## தரிசனம்

கண்டவுடன்
காதல்
அமிர்தமுமாகலாம்
ஆலகால விஷமுமாகலாம்
— காதலனில்
காலனுமுண்டு
காவலனுமுண்டு.

லாவண்யா

## பூஜ்ய மனிதர்கள்

ஒன்றுக்குப்
பின்னே சென்று
இலட்சங்களையும்
கோடிகளையும்
உருவாக்குகின்ற
பூஜ்யங்கள்
ஒன்றுக்கு
முன்னே சென்று
அதன்
இலட்சியங்களையும்
கொள்கைகளையும்
உருவழித்துவிடுகின்றன
அதனால்
இலட்சங்களையும்
கோடிகளையும்
உருவாக்கும்
ஒன்று
முன்னணியில் நிற்க
இலட்சியங்களையும்
கொள்கைகளையும்
உருவாக்கும்
ஒன்று
பூஜ்யங்களிலும்
பின் தங்கிவிடுகின்றது,

— அம்மைஅப்பன்

## கணவன் மனைவி

மங்கை நீ ஒரு
சந்தனம்...!
மன்மத மந்திரம்
உச்சரித்து நான்
உன்னை
அள்ளி பூசிக்கொள்கிறேன்
கணவன் என்கிறார்கள்!
அன்பே—
நீங்கள் ஒரு மஞ்சள்பூ!
காதலுடன் நான்
சூடிக்கொள்கின்றேன்
மனைவி என்கின்றார்கள்...!

— முல்லை அமுதன்

## உயர்ந்த பரிசு

● பண்டைக் காலத்திலிருந்து ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடந்து வருகின்றன. அன்று விளையாட்டு வீரர்களிலும் பார்க்க மிகவும் உயர்ந்த பரிசு சிறந்த கவிஞருக்கே வழங்கப்பட்டது.

## பழக்கதோஷம்

டாக்டர்: ஆசிரியர்... உங்க பத்திரிகைக்கு ஒருவரு 'பிறிஸ்கிறிப்ஷன்' என்ன?

ஆசிரியர்: !!!

பெண்கிளி: மனிதனுக்குச் சிந்திக்கத் தெரியுமாம். எமக்குச் சிந்திக்கத்தெரியாதாம்:

ஆண்கிளி: சிந்திக்கத் தெரிந்த மனிதன்தான் சிந்திக்கத்தெரியாத எங்களைவைத்து சோதிடம் சொல்கின்றான்.

நாகபூஷணி




● என்ன மாப்பிளையின் முகம் வாடியிருக்கு.

□ மின்சாரமுள்ள வீட்டை சீதனமாக வாங்கியவருக்கு ஒருதர் கரி ஸ்திரிப்பெட்டியைப் பரிசாகக் கொடுத்திட்டார்.

— நாகபூஷணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



P. சாந்தரூபன் நுணாவில்

கே: ஒருஇனம் எப்போது அழி கின்றது?

ப: ஆண்மையையும், ஆன்மாவை யும் இழந்தபோது.

❋ ❋

எஸ். வேலுசாமி சாந்தநோட் டம்

கே: மதம் இன்று ஐஸ்பெட்டியின் அடித்தட்டில் உள்ள விஷயம் உங்கள் கருத்து?

ப: தப்பு. மதத்தை முன்வைத்து தேர்தலில் குதிப்பதற்கு ஒரு கோடீஸ்வரர் கர்சை கட்டு வதாக ஒரு செய்தி அடிபடு கின்றதே!

❋ ❋

எஸ். எம். ஹலி அமீர் சாய்ந்தமருது

கே: மகுடியாரே நீர் எந்த அரசி யல் கட்சியைச் சேர்ந்தவர்?

ப: அணிசேரா நாடுகள் போல் யான்ஒரு அணிசேரா ஆத்மா

❋ ❋

கீதா மயில்வாகனம் கந்தர்மடம்

கே: நம் நாட்டவர்க்கு சங்கீதப் பற்றுண்டா?

ப: சங்கீதக் கச்சேரி யென்றால் அங்கு நாலுபேரைக் காண லாம்: காணிக்கச்சேரியென் றால் அங்கு நாட்டையே காணலாம்.

❋ ❋

எல். எஸ். ரவிநாத் புந்தூர்

கே: இளைஞர்கள் தவறான வழி யில் போய்க்கொண்டிருக்கின்றார் களென எமது அரசியல் ஞானி கள் கூறுகின்றார்களே! அதுபற்றி மகுடியார் கருத்து என்ன?

ப: அன்று ஏதன்ஸ்நகர தத்துவ ஞானிசோக்கிரற்ரீஸ்இளைஞர் களைப் பார்த்து ''உன்னையே நீ அறிவாய்'' எனச்சிந்தனை விழிப்பைப் போதித்தார். அதே மோஸ்தரில் எமது ஞானிகளும் எமது வாலிபர் களுக்கு ஏதோ கூறுகின்றார் கள்போலும்.

❋ ❋

எஸ். நஸீர் சம்மாந்துறை

கே: தொலைக்காட்சியால் ஏதும் நன்மை உண்டா?

ப: மாணவர்களின் வீட்டுப்பா டத்திற்கு அரோகரா.

❋ ❋

எம். ஏ. சி. றபாய்தீன் காத்தான்குடி 04

கே: அன்றைய பெண்களுக்கும், இன்றைய பெண்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அன்று ஆண்கள் அவர்களை பிள்ளை பெறும் யந்திரமாகப் பாவித்தார்கள். இன்றுஆண் கள் அவர்களிடம் அரசியல் மந்திராலோசனை கேட்கின் றார்கள்.

நாகமணி மகேந்திரலிங்கம் சங்கானை

கே: நாளைய நாகரீகம் பற்றிச்சில வரிகள்?

ப: நாளைய அரசியல் பற்றி சோதிடம் கூறலாம். ஆனால் நாளைய நாகரீகம்பற்றிச் சோதிடம் கூறுவது மிக மிகக்கடினம்.

❋ ❋

எஸ். சிறீஸ்கந்தவனம் மட்டக்களப்பு

கே: ஓரறிவு படைத்த மரத்திற் கும் ஆறறிவு படைத்த மனித னுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: மரம் மேலிருந்து பழத்தைப் போட்டது. மனிதன் மேலி ருந்து பாழும் குண்டைப் போட்டான்.

❋ ❋

தேவநாயகி காங்கேசன்துறை

கே; எதுஉமது பார்வையில் மதிப் புக்குறைந்தது?

ப: வீரனின் கையிலிருக்கும் பற் குத்தும் துரும்பிலும்கோழை யின் கையிலிருக்கும் தங்க வாள் மதிப்புக்குறைந்தது.

❋ ❋

செல்வராசா பண்டத்தரிப்பு

கே: மானத்தை மேலாக மதிக்கும் ஏழைகளின் வாழ்க்கை எப்படிப் பட்டது?

ப: அது கண்ணீர்த் திரைக்குப் பின்னால் நடக்கும் சோக நாடகம்.

❋ ❋

எஸ். எம். வாசுகி வவுனியா

கே; உலகம் எவர்களால் சிறப் புற்றது?

ப: சினிமாக் கதாநாயகர்களா லல்ல, சரித்திரக் கதாநாயக ர்களால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகரட்ணம் முகமாலை

கே: கொள்கை இல்லாதவனுக்கு எது பெரிது?

ப: பணப்பையும், இரைப்பையும்

❋ ❋

மயிலுநாதன் வட்டுக்கோட்டை

கே: நாம் தியாகிகளின் சின்னங்களை எப்படி மரியாதை பண்ணுகின்றோம்.

ப: நாம் புல்வளர்த்து அஞ்சலி செலுத்துகின்றோம். இங்கு வரும் அந்நிய நாட்டவர் பூவளையம் வைத்து அஞ்சலி செலுத்துகின்றார்கள்.

❋ ❋

டேவிட் ராமேந்திரம் வெள்ளவத்தை

கே: கூழ்குடித்துவிட்டு எழுதிய காலத்துக் கவிதைகளுக்கும் புரியாணி சாப்பிட்டுவிட்டு எழுதும் கவிதைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: கூழ்காலத்துக் கவிதைகள் போல் புரியாணிகாலத்துக் கவிதைகள் ஆணிமுத்தாக இல்லையே!

❋ ❋

எஸ். நகுலன், பளை

கே; உலகில் நாகரீகம் எப்போ ஆரம்பமானது?

ப: நாடற்றவர்களென ஒருபகுதியினர் உலகில் இருக்கும் வரை உலகம் அநாகரீகநிலையில்தான் இருக்கின்றது என்பது எனது கருத்து.

❋ ❋

எம். மதிவதனி யாழ் பெண்கள் விடுதி

கே: மகுடியாரே... நீர் விலா எலும்பு நோகச் சிரித்ததுண்டா?

ப: வரதட்சிணை வாங்கும் சமுதாயம் பாரதிக்கு விழாஎடுக்கும் போதெல்லாம் விலா நோகச் சிரித்ததுண்டு.

ராது. கணபதிப்பிள்ளை முள்ளியவளை

கே; காதல் திருமணம் செய்து பெற்றதாயை மறந்திருக்கும் மகனைப்பற்றி உமது கருத்து?

ப; பெற்றதாயை எந்தக் கல்நெஞ்சனும் மறக்கமுடியாது. காலில் ஒருசிறு கல் இடித்தபோதும் அம்மா என்றல்லவா அவலக்குரல் எழுப்புவான்.

❋ ❋

அருள்வதனி திருகோணமலை

கே: எமது கல்வியால் நாம் கண்ட பயன் யாது?

ப: சிந்தனைச்சோகை ஏற்பட்டது

❋ ❋

பொன். சிவநேசன் மண்டைதீவு

கே: அன்றைய திருமணத்திற்கும் இன்றைய திருமணத்திற்குமுள்ள வேறுபாடு என்ன?

ப: அன்றுமணமகன் தாலியுடன் பெண்ணைவீடுதேடி வந்தான் இன்று அந்நியநாட்டிலிருக்கும் மணமகனைத்தேடி பெண் தாலியுடன் போகின்றாள்.

❋ ❋

கண. ராஜேஸ் காத்தான்குடி

கே: நாட்டின் பிரச்சினைகள் சமாளிக்க முடியாத நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன?

ப: பேச்சுவார்த்தையில் மூச்சு போகிறது முழுமூச்சுடன் செயலில் இறங்குவதில்லை,

❋ ❋

குமரன் கவுன்சில்லேன் தெகிவளை

ப: இன்றைய தாய்பற்றி உமது கருத்து?

ப: இன்று சேய்க்குவரும் நோய்க்குத் தாய் மருந்துண்பதில்லை. காரணம் இன்று பிள்ளைக்கு அம்மா பாலில்லை, மாப்பால் தான்.

தில்லைநாதன் நாவற்குழி

கே: புல்லாங்குழல் இனிமைக்குக் காரணம் என்ன?

ப: அதுகட்சி ஊதுகுழல் அல்ல

❋ ❋

நித்தியவதனி வல்வெட்டித்துறை

கே: எவன் இருதயம் இல்லாத இராட்சதன்?

ப: கணவனின் ஆயுள் வேண்டி சோமவாரவிரதம் அனுஷ்டிக்கும் மனைவியிடம் விவாகரத்துக் கோருபவன்.

❋ ❋

சோமஸ்வரன் மருதமுனை

கே: அஞ்ஞானிக்கும் ஞானிக்கும் உள்ளவேறுபாடு என்ன?

ப: ஞானிக்குஉலகம் அவன்வீடு. அவனுக்கு எல்லைவழக்கில்லை

❋ ❋

குறள்மொழி மல்லாகம்

கே; தமிழினத்திற்கு கடவுள் கொடுத்தவரம் என்ன?

ப: நாதஸ்வரம்.

■ ■

மோகனசுந்தரம் வல்வெட்டி

கே: கலை, இலக்கிய அரசியல் உலகில் சுயநலவாதி எப்படி இருப்பான்?

ப: பிறருக்கு நிழல் கொடாத மூங்கில் மரமாயிருப்பான். தான் ஓங்கிவளரவேண்டும் பிறர் ஒதுங்கி ஒழியவேண்டுமென்ற மனம்கொண்டவனுயிருப்பான்.

❋ ▣

சி. ஜெயதேவன் கரவெட்டி

கே; பாரதிநூற்றாண்டு நினைவாக நாம் என்ன தீர்மானம் எடுப்பது நன்று?

ப: மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம்'' எனப்பாரதி பாடினார். நாம் பெண்களை இழிவு செய்யும் சஞ்சிகைகளைக் கொழுத்துவோமென்று சங்கற்பம் எடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடவைப் பூங்கா

வனிதையர் வண்ண ஓவியமாகத் திகழ
வானவில் வர்ணங்களில்
வகைவகையான தினிசுகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

கணேசன் ஸ்ரோர்ஸ்

Kanesan Stores

63, 78. K. K. S. Road,
JAFFNA.
T. Phone: 7169, 8025 தொலைபேசி

# இராச விருந்துப் போசனம்

பாரிமன்னனின் மக்களாகிய அங்கவை, சங்கவை என்போரது திருமணத்தின்போது வருகை தந்திருந்த மூவேந்தருக்கும் விருந்து கொடுப்பதற்கு, தமிழ்மூதாட்டியார் ஔவைப் பிராட்டியார் முக்கனிகளில் ஒன்றையேனும் தெரிவுசெய்யாது பனம்பழத்தினையையே தெரிவுசெய்தார் என்றால் பனையின் மகத்துவத்தை என்னென்று கூறுவாம்.

திங்கட்குடை யுடைச்சேரனும்சோழனும் பாண்டியனும்
மங்கைக்கறுகி வந்திருந்தார் மணப்பந்தலிலே
நொங்குக் கண்முற்றி அடிக்கண் சிவந்து
பங்குக்குமூன்று பழம்தாபனம் துண்டமே.

ச. சபாரட்ணம்
திருநெல்வேலி

# சிரித்திரன் அகராதி

**அஞ்சலி**
கண்ணீர் துடைப்பதற்கு சொற்களால் நெசவுசெய்யப்படும் கவிக்குட்டை.

**தண்ணீர்:**
உயர்வு தாழ்வு தெரியாத சமநிலைகாணும் சமதர்மவாதி.

**புகை:**
தீ உமிழும் எச்சில்

**சத்தம்:**
நாகரீக உலகின் சங்கீதம்.

**சீதனம்:**
விவாக நிவாரணம்.

# நாவும் பேனாவும்

- பேனாவை மொரார்ஜீ தேசாய் நாவிலும் மேலாக மதிப்பவர்.

''தேர்தலில் விண்ணப்பத்தில் கொடுத்தால்தான் வாக்குறுதி. தேர்தல் பிரச்சாரத்தின்போது மேடையில் சொல்வது வாக்குறுதி ஆகாது'' என ஓர் சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

---

★ கதிரவன் மறைந்து விட்டானே என்று நீ கண்ணீர் வடித்தாயானால் (இப்போ வந்துள்ள) தாராகணங்களையும் பார்க்காமல் இழக்கிறாய்.

—தாகூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● கொத்து: 3

# இடதுசாரிகள்

இடது கையால் எழுதும்பிள்ளைகளைச் சில பெற்றோர் கண்டிப்பதுண்டு சில பெற்றோர் தண்டிப்பதுண்டு அவ்வாறு அவர்கள் செய்யக்காரணம் அறியாமை மட்டுமல்ல இடதுகை அதிஷ்டமற்றகை என்றும் வலதுகையே அதிஷ்டமான கை என்றும் ஒரு எண்ணமேயாகும். எப்பொருளையும் கொடுக்கும்போதும், வாங்கும் போதும் வலதுகையால் கொடுப்பதும், வாங்குவதும் இதன் அடிப்படையில் எழுந்த செயல்பாடுகளேயாகும். இதனால் வலது கை வழங்கும்கை என்றும் இடதுகை இடறும்கை என்றும் முதுமொழியும் உருவாயிற்று. ஆனால் எத்தனையோ உலகப்புகழ் பெற்ற அரசியல் தலைவர்கள், மேதைகள், படைத்தளபதிகள் இடதுகைப் பேர்வழிகளாக இருந்துள்ளதோடு அரும்பெரும்சாதனைகளையும் ஆற்றியிருக்கிறார்கள்

ஹொலிவூட் படவுலகில் பெரும் நகைச்சுவைப் பேர்வழியாக விருந்து உலகம் பூராவும்வாழும் பல கோடிக்கணக்கான இரசிகர்களைத் தனது உயர்ந்த நடிப்பாலும் திரைப்பட நெறியாள்கையாலும் மெய்மறக்கச் செய்தவர் சார்லி சப்ளின்; அவர்மீது இரசிகர்கள் கொண்டிருந்த அபிமானத்தால் புதைக்கப்பட்ட அவரது சடலத்தையே புதைகுழியிலிருந்து எடுத்துச்சென்றனர். அந்தளவுக்கு மக்கள் அபிமானம் பெற்ற அந்த மாபெரும்கலைஞர் ஒரு இடதுகைப் பேர்வழியேயாகும். இதேபோல் பிரபல அமெரிக்க நடிகை ஒலிவியா டீ ஹவிலண்ட் ஒரு இடதுகைப் பேர்வழியாகும்.

இத்தாலி ஆத்மீகத்துறையில் மட்டுமன்றி கலையுலகிலும் விஞ்ஞான உலகிலும்கூட பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நாடு. ஒப்பற்ற இரு ஓவியமேதைகளான லியானோ டாவின்சியையும், மைக்கல் அஞ்சலோவையும் உலகிற்கு அளித்தநாடு இந்தநாடு. கால வெள்ளத்தால் அழியாத ஓவியங்களைத்தீட்டி ஓங்குபுகழ்மிகு இவ்விரு மேதைகளும் இடதுகைப் பேர்வழிகளேயாகும்.

தனது மதியூகத்தால் கொந்தளிக்கும் சாகரத்தின் நடுவிலும் வியூகம் அமைத்து நெப்போலியன் என்னும் அந்த மாவீரனை திரபால்கர் யுத்தத்தில் தோற்கடித்த

## அமிர்தவர்ஷிணி

பிரித்தானிய கடற்படைத்தளபதி நெல்சன் அவர்கள் ஒருஇடதுகைப் பேர்வழியேயாகும்,

இரண்டாவது உலகமகாயுத்த காலத்தின்போது அமெரிக்க ஜனாதிபதியாக விருந்தவர் ட்ருமன். உலகப்புகழ்பெற்றஅக்காலத்தேய மூன்று தலைவர்களில் இவரும் ஒருவர். பின்னைய காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த நிக்சன் வாட்டகேற் ஊழலில் அகப்பட்டு பதவி இழக்க நேரிட்டதும் அந்த இடத்தை ஜெரால்ட் போர்ட் நிரப்பினார். அண்மைக் கால அமெரிக்க வரலாற்றில் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகளில் பதவிவகித்த ட்ருமனும் போர்ட்டும் இடதுகைப் பேர்வழிகளேயாகும்.

மக்கள் அபிமானம் பெற்றதிரைப்பட நட்சத்திரங்கள், புகழ்பெற்ற ஓவியர்கள், திறம் படைத்த படைத்தளபதிகள், கீர்த்திமிக்க அரசியல் தலைவர்களைப்போல் அறிவொளி வீசிய மேதைகளும் இடதுகைப் பேர்வழிகளாக இருந்துள்ளார்கள். இவர்களில் ஸ்கொத்லாந்து நாட்டு வரலாற்றுப் பேராசிரியர் தோமஸ்கார்லே அவர்களை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இடதுகையால் எழுதும் பிள்ளைகளைக் கண்டிக்கும் பெற்றோர் இனி என்ன கூறுவார்களோ?

## தனித்துவம்



● உலகில் எந்த இனத்தவரின் உள்ளங்கையின் தோல் தடிப்பு... சொல்லுபார்க்கலாம்.

□ தெரியவில்லையே


● தமிழனின் உள்ளங்கை... மேடைப்பேச்சிற்கு ஓயாது கைதட்டுபவனல்லவா?

ஜோக்கிரட்டீஸ்

● கற்றறிந்த அறிஞர்களே ஒரு நாட்டின் கருவூலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுத்த உடல்கள்... வெளுத்த உள்ளங்கள்...

போல்கா

அவன் தன்விதியை எண்ணித் தன்னையே நொந்துகொண்டான்.

அவன் இதை எதிர்பார்க்கவில்லை,

தன் மாற்றத்தைத் தவிர்க்க கல்வித்திணைக்களம் முதல் கல்வி அமைச்சு வரை பலதடவைபடி ஏறிவிட்டான்.

அதிகாரி தொடக்கம் அரசியல் வாதி ஈறாக அவன் எவரையும் காணாமல் விடவில்லை.

அத்தனை பேரிலும் வெறுப்புக் கொண்டான்.

இதற்குத்தானா மூன்று வருடம் ''மட்டை''யடித்தோம் என்று சலித்துக் கொண்டான். தன் தொழிலை சபித்துக்கொண்டான்.

தன்னைப் பார்த்தே அலுத்துக் கொண்டான்.

கேவலம்! இந்தஒருவிஷயத்தையே தன்னால் தன்னிஷ்டப்படி செய்ய முடியவில்லையே... சே... என்ன வாழ்க்கை...

அதுதான் அவனால் வாய்விட்டுச் சொல்லமுடிந்தது.

முடிவில் —

பஸ்ஸேறினான்.

ஆசிரியர் பயிற்சியை மூன்றாண்டு காலம் முடித்தவனுக்குக்கிடைத்த இடம்... அவனுக்குப் புதிதுதான்

அவனால் தாங்கிக்கொள்ள முடியாத... குளிரான...

அதுவும் ''அந்த'' மனிதர்கள் மத்தியில்...

மனத்தில்இனமறியாஅழுத்தமான கசப்புணர்வு...

மலையகம் என்றாலே மனங்கவரும் பசுமை... எழில்... அழகு...

அவனுக்கோ மலையகத்துக்கு மாற்றம் என்றதுமே அருவருப்பு... ஆற்றொணா வெறுப்பு... பஸ்ஸேறி ''அந்த'' தோட்டத்தை அடைந்தான்.

முதன்முதலில் அவனின் கண்களில் பட்டது...

லயங்கள்...லயங்கள்......லயங்கள் ஒரு காம்பிராவினுள்ளே குடும்பமாக வாழும் அந்தக் ''கறுத்த' மனிதர்கள்... அந்தஅழுக்குஆடைகள்...

...குழந்தைகள்...

வாசலில் தேங்கி நிற்கும் சாக்கடை....

சீ... இந்த இடத்திலா நான் கற்பிக்கப் போகிறேன்...

விட்டுவிட்டு ஓடுவோமா... என்று தன்மனத்துள் எழுந்து வியாபித்த எண்ணத்தைச் சட்டென அடக்கிக் கொண்டான்.

விட்டுவிட்டு என்ன செய்வது...'

தனக்கென கொடுக்கப்பட்டபாடசாலையை அடைந்தான்...

நகரச் சூழலில் படித்து...

நளின வாழ்க்கை வாழ்ந்து... நகரப் பாடசாலையிலேயே கற்பித்தவனுக்கு தனித்து ஒதுங்கியிருக்கும் இப் பாடசாலையை கண்டதுமே வேப்பங்காயைத் தின்னுவதுபோல் தொண்டையெல்லாம் ஒரே கசப்பு... மனமே கசந்தது... ஏன் வாழ்க்கையும்தான்...

பாடசாலையோடு அமைந்த அறையைத் தன் அலுவலகமாக...படுக்கையறையாக...சமையலறையாக ஆக்கிக்கொண்டான்.

புது ஆசிரியர் வந்ததால் மாணவர்களின் தொகை அதிகம்...

அவர்களைக் கண்டதுமே அவன் மனத்தில் அலுப்பு வழிந்தது...

''வணக்கம் சார்...''

எத்தனை பணிவான குரல்கள்...

''சரி சரி போய்ப்படியுங்கோ...''

வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்...

தானே தன்கையால் முதன்முதலாகச் சமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்ததையிட்டு வேதனை தாங்காமல் அழுதுவிட்டான்.

மீனில்லாமல் சோறு இறங்காது அவனுக்கு...

மலையகத்தில்... அதுவும் கண்டியிலிருந்து முப்பத்திரண்டுமைல் தொலைவிலுள்ள ஓர் மலையில் எங்கிருந்து மீன் வரும்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை தொடங்கியபோது 10மணியாகி விட்டது.

பழனியப்பன்...

சோலைச்சாமி...

முத்துக்கருப்பன்...

தெய்வானை...ராசாத்தி... ராமன் ராமன்... ராமன்... பதிலில்லை... நிமிர்ந்தான்... ''வரேன்சார்...

அப்போது தான் ராசாத்தி பாடசாலைக்குவந்துகொண்டிருந்தாள்.

அவசரமவசரமாக வாரப்பட்ட தலை...

கறுத்த நெற்றியில் ''பளிச்' சென திருநீற்றுப்பட்டை...

கசங்கி நிறம் மங்கிய சட்டை...

தன் எல்லாவெறுப்பும்... கோபமும்... ஏமாற்றமும்... ஒருங்கே அவன் கண்களில் தெரிந்தது.

'இஞ்ச வா...'' அதட்டிக் கூப்பிட்டான்.

அந்தப் பிஞ்சு உடலில் அவன் கையிலிருந்த பிரம்பு வரிகளை எண்ணியது...

அந்தப் பிஞ்சின் அலறல்...
—அவன் நெஞ்சை இளகவைக்கவில்லை...

அவன் ஆத்திரம் அடங்கியது.

ராசாத்தி தேயிலை கொய்யப் போயிருந்த தன் தாயுடன் வந்தாள்...

''ஐயா... சாமீ... இவ எம்மக தான்... இப்புடி தாறுமாறு அடிச்சுப்பூட்டீர்களே... இது நியாயமா...?''

அவள் நியாயம் கேட்டு அழுதாள்...

அந்தப் பிஞ்சைப் பெற்றவயிறு அந்தக் குருதிக் கசிவைக் கண்டு குமுறியது...

''சீச்சீ... போபோ... உன்னால முடியுமெண்டா என்ன இஞ்சயிருந்து மாத்தலாம்...''

அவன் ஆத்திரத்தின் முன் அந்த தாயின் அழுகை பலிக்கவில்லை... ஏமாற்றத்துடன் திரும்பினாள்...

வெறுப்புடன் அவன் சாக்குக்கட்டிலில் விழுந்தான்...

இரவாகியது—

மணி பத்திருக்கும்.

இரத்தத்தை உறைய வைக்கும் பனிக்குளிர்.

இரண்டு பெட்சீட்டினுள் தன்னை நுழைத்துக் கொண்டான்.

திடீரென...

பட்...பட்...பட்...

கதவு தட்டப்பட்டது.

புரியாத பாஷை...

கதவு உடைக்கப்பட்டது.

நாலைந்துபேர்.

கையில்தடி...

அவனது உடைமைகள் அவர்கள் கைக்கு மாறியது.

அடுத்து அவனுக்கு என்னநடந்...
விழித்தபோது—

தன்னைச்சுற்றி எத்தனை கண்கள்...

அந்தக் கண்களில் தெரிந்த பரிவு பாசம்... இரக்கம்...காருண்யம்... அவனை நெகிழவைத்தன.

தலைக்கட்டு விஸ்விஸ் என்றுவலித்தது...

''சார்... ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக ஏலாதுங்க... கை மருந்துதான் கட்டியிருக்கோம். ...பயப்படாதீங்க சீக்கிரம் ஆறி விடும்...''

அதே தாய்... அந்தப் பிஞ்சின் தாய்...

ரா...மா... ராமன்... அவன்வாய் முணுமுணுத்தது.

''சார்... சர்பம் குடியுங்க சார்...
அந்தப் பிஞ்சின் கைநீண்டது.

மெல்ல அந்தப் பிஞ்சைத் தன்னோடு அணைத்துக்கொண்டான்.

தன் வெறுப்பு...கசப்பு... சகிப்பு... ஏமாற்றம்... அத்தனையும் அந்தப் பரிவின் முன்... பாசத்தின் முன்... அன்பின்முன்... கரையத்தொடங்கின.

அவன் விழிகளில் நீர்த்துளிகள் மெல்ல அரும்பின.


யாவும் கற்பனை



● ஏன்டி மூக்கும் முழியுமாயுள்ள மாப்பிள்ளையைப் பார்த்து பார்வையில்லாதவரென்று மறுக்கிறாய்,

☐ அம்மா... அவர் பத்திரிகையில் வேலைபார்ப்பவர். ஆசிரியர் சொல்வதை எழுதுபவர், சொந்தப்பார்வையில் எழுதமுடியாது.

—அதிமதுரம்



● நாணயத்திற்குக் கொடுக்கும் மதிப்பு நான்என் மனைவிக்கு கொடுப்பதில்லை.

☐ மனைவி நாகரீகமுள்ள பெண்ணாச்சே!

● நாகரீகமென்ற பேரில் கூந்தலைக் கத்தரித்திட்டாள். தலைக்கு பூ வைப்பதில்லை. நாணயத்திற்கு பூவும் தலையுமுண்டு... என் மனைவிக்கு இரண்டுமில்லை.

—ஜோக்கிரட்டீஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீர்பாலின் சாகசம்

**மோ**கலாயப் பேரரசர் அக்பர் ஒருநாள் கனவொன்று கண்டார். அரண்மனை ஜோதிடரை அழைத்து அந்தக் கனவின்பலன் என்னவென்று கேட்டார். ஜோதிடர் யோசித்துவிட்டு தங்களின் உறவினர்கள் யாரோ இறந்துவிடப் போகின்றார்கள் என்று பலன்சொன்னார். கோபமடைந்த அக்பர் அந்தஜோதிடனை சிறையிலடைக்கும்படி கட்டளையிட்டார். பின்னர் தனது அந்தரங்க நண்பரான பீர்பாலை அழைத்து தான்கண்ட அந்தக்கனவின் பலனைச் சொல்லும்படிகேட்டார், பீர்பால் சற்றுநேரம் யோசனை செய்தபின் மன்னரை நோக்கி, தாங்கள் தங்களது சுற்றத்தார்களைவிட அதிககாலம் ஜீவித்திருப்பீர்கள் என்றார். அந்தப்பதிலைக் கேட்ட பாதுஷா மிகவும் சந்தோஷப்பட்டு உமக்கு என்ன சன்மானம் வேண்டுமென்று கேட்டார். உடனே பீர்பால் மன்னவா அந்த ஜோதிடனை விடுதலை செய்யுங்கள் எனக்கேட்டார் விடுதலை செய்யப்பட்ட ஜோதிடனைப் பீர்பால் அழைத்து முட்டாளே நீ சொன்ன பலனும் நான்சொன்ன பலனும் ஒன்றுதான். ஆனால் சொன்ன விதத்தில் வித்தியாசம் நீ சொன்னபலன் உனக்கு சிறைவாசத்தைக் கொடுத்தது. நான் சொன்னபலன் சன்மானத்தைத் தந்தது என்று கூறினார்.

விஸ்வரூபன்



- அந்தப் பணக்கார வீட்டு அம்மாவிலும் அல்சேஷன் நாய் நல்லது.
- என்ன!
- பிரசவ ஆஸ்பத்திரி கட்டுவதற்கு நிதிஉதவி கேட்டுப் போனோம் அம்மா குலைத்தா அல்சேஷன் வாலைஆட்டியது.

ஏழைவாலிபன்; உடல் மெலிந்துபோயிருக்கு நீ பணக்காரவீட்டுப் பிள்ளையாச்சே நீ சாப்பிடுவதில்லையா?

பணக்காரவாலிபன்: கவலை... காதலி கைவிட்டிட்டாள். நீயும் மெலிந்திருக்கிறாயே! காரணம் என்ன?

ஏழைவாலிபன்: அரசியல்வாதி கைவிட்டிட்டார்.

அதிமதுரம்



- என்ன உங்க மகன் ஸ்திரீப் பெட்டி வேணுமென்று ஒற்றைக்காலில் நிற்கிறான்.

கணவன்: ஒரு ஸ்திரீயில் காதல் என்பதுதான் அர்த்தம்.

அதிமதுரம்


வானவில் வண்ணங்களில்
அழகுக்கலை கொஞ்சும்
ஜவுளித்தினிசுகளின் களஞ்சியம்

**சிங்காரம்ஸ்**

நவநாகரீக தங்க, வைர நகைகளில்
தேர்வுச் சுரங்கம்

**டைமாநகை மாளிகை**

செட்டியார் தெரு
கொழும்பு.
தொலைபேசி: 20785



**நூலறிவுடையோர் நுண்ணறிவுடையோர்**

நுண்ணறிவுடையோர் கலைத்திறன் மிக்க
தையல் வேலைகளுக்கு தேர்வுசெய்வது

**முயல் மார்க் நூல்களையே!**

தயாரிப்பாளர்:

**சம்பியன் திரெட்**
**மனுபக்சரிங் கம்பனி**

கொழும்பு—12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்னனும் மேஜரும்

ராஜஹம்ஷ

**மா**வீரன் மஹா அலெக்சாண்டர் தான் கைப்பற்றிய ஒருநாட்டில் தனது சேனையுடன் தங்கியிருந்தான் ஒருநாள் அவன் தங்கியிருந்த ஊரிலிருந்து அடுத்த ஊருக்குப் போய்க்கொண்டிருக்கும்போது வழியில் அவனுடைய குதிரை களைத்துப்போய்விட்டது. எனவே அந்த ஊரில் கூடாரமிட்டிருந்த கிரேக்க சேனுவீரர்களின் பாசறைக்குச் சென்று அந்தக் குதிரையை விட்டுவிட்டு வேறொரு குதிரையை தயார் செய்துவைத்திருக்கும்படி அந்தப்பாசறையின் தலைவனுக்குக் கட்டளையிட்டு விட்டு கால்நடையில் சென்றுகொண்டிருந்தான் வழியில் ஒரு நாற்சந்தியில் ஒருகிரேக்க அதிகாரி காவல்காத்து நின்றுகொண்டிருந்தான். அலெக்சாண்டர் அவனை அணுகி மிகவும் பவ்யமான குரலில் அந்தவீரனிடம் கேட்டான் ''மன்னிக்கவேண்டும்'' பெர்சியோ போலிசுக்குப்போகும் வழியைக் காட்டுவீரா! என்றான். வாயில் பெரியதோர் சுங்கானை வைத்து ரசித்துக்கொண்டிருந்த அந்தவீரன் மாறுவேடத்தில் — சாதாரணப்போர் வீரனின்உடையில் காணப்பெற்ற * சிக்கந்தரை ஒருமுறை ஏற இறங்கப்பார்த்து தன் மனதுக்குள் இந்தச் சாதாரணவீரன் என்ன தைரியத்துடன் என்னிடம்வந்து இப்படிக்கேட்கிறான் என்று நினைத்தபடி 'வலது பக்கம்போ' என்று இரத்தினச் சுருக்கமாகப் பதில்சொன்னான். 'நன்றி' என்று கூறிவிட்டு சிக்கந்தர் முன்னரைக் காட்டிலும் அதிக பணிவுடனும் விநயத்துடனும் கேட்டான். ''மன்னிக்க வேண்டும்' தாங்கள் கிரேக்க சைன்னியத்தில் என்னபதவி வகிக்கின்றீர்கள்? என்றான். அப்பொழுது அந்தவீரன் அலெக்சாண்டரை வெறுப்புடன்நோக்கி, ''எனது பதவியை நீயே யூகித்துச் சொல் பார்க்கலாம்'' என்றான் உடனே அலெக்சாண்டர் ''சார்ஜன்ட்'' என்றான், இல்லை, மேலே என்றான் அந்தவீரன். ''கப்டன்' என்றான் அலெக்சாண்டர். இன்னும் மேலே, என்றான் வீரன். 'லெப்டினண்ட்' என்றான் சிக்கந்தர். இன்னும் மேலே, என்றான் வீரன். அப்படியானல் ''பிரிகேடியர்'' என்றான் அலெக்சாண்டர், கிட்டே வந்துவிட்டாய் மேலே சொல்லு என்றான். அப்படியானல் 'மேஜர்' என்றார். ரொம்பவும்சரி, யென்றான் அந்தவீரன் இறுமாப்புடன். உடனே அலெக்சாண்டரை அந்த வீரன்கேட்டான், உம்முடைய பதவியைச் சொல்லமுடியுமா? என்று கேட்டான். அப்பொழுது அலெக்சாண்டர் அவனைநோக்கி நீரே யூகித்துச் சொல்லும், என்றான். அந்த வீரனும் சார்ஜண்டிலிருந்து ஒவ்வொன்றாக'மேலேமேலே, சொல்லி வந்தவன் மேஜரில் வந்துநிறுத்தினான். அலெக்சாண்டர் இன்னும் மேலே என்று சொல்ல அவன் வாயிலிருந்த சுங்கான் கீழேவிழ பதட்டத்துடன் சொன்னான் 'லெப்டினன்ட்' என்று. இன்னும் மேலே என்றான் அலெக்சாண்டர். மேலும் கலவரமடைந்த அந்த வீரன், 'பீல்ட்மார்ஷல்' என்றான் அப்பொழுது அலெக்சாண்டர் அவனைப்பார்த்து கிட்டே வந்துவிட்டாய். இன்னும் ஒரேஒரு படிதான் இருக்கிறது என்றான். உடலெல்லாம் வெட வெட வென்று நடுங்க அந்தவீரன் அலெக்சாண்டரின் முன்னால் தனது முழந்தாழ்களில் மண்டியிட்டு ''மாட்சிமை தங்கிய மஹா சக்கரவர்த்தி அவர்களே என்னை மன்னியுங்கள்'' என்று கெஞ்சினான். அந்தவேளையில் சிக்கந்தர் அவனைநோக்கி எதற்காக நான் உன்னை மன்னிக்கவேண்டும். பெஞ்சியோபோலிசுக்குப் போகும் வழிகேட்டேன். நீ அந்த வழியைக்காட்டினாய். மற்றும்படி நீ எனக்கு எந்தவிதக்குற்றமும் செய்யவில்லையே. என்றுசொல்லிவிட்டுத் திரும்பிப் பாசறைக்குச் சென்றான்.

* பாரசீகத்திலும், பாரதத்திலும் அலெக்சாண்டரை சிக்கந்தரென அழைத்தும் வந்தார்கள்



எழுத்தாளன்: ஏன் என் நண்பர் குத்துவிளக்கை பிறந்ததினப் பரிசாக எனக்குத் தந்தார்.

மனைவி: நீங்க புத்தகம் வெளியிடும் கணக்கை குத்துவிளக்கில் பார்ப்பதற்குத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்களையில் சில கவிஞர்கள்

'நக்குண்டார் நா இழந்தார்'' தமிழ்ப் பழமொழி. பாவினால் பைந்தமிழை வளர்த்த நம் கவிஞர்கள் நாவினால் நல்ல உணவுகளைப் பதம் பார்த்தே வாழ்ந்தனர். கூழ் என்றாலும் குளித்துக்குடி என்றும், உப்பில்லாத பண்டம் குப்பையிலே என்றும் சில வரையறைகளை அமைத்த எமது கவிஞர்கள், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்றுபாடி அடுக்களையின் அருமையினை அகிலத்துக்கு எடுத்துக்காட்டினர். பண்டைத் தமிழ்ப் புலவனும் திருமூலரும் 'உடம்பை வளர்த்தோன் உயிர் வளர்த்தோனே' என எடுத்தியம்பத் தவறவில்லை.

இன்றிருக்கும் உடல்நிலை நாளை இராது. அதனால் மனிதன் தன் ஜீரண உறுப்புக்கள் எவ்வாறு வேலைசெய்கின்றது என்று எண்ணியே உணவுகொள்ளுதல் வேண்டும். இதனையே வள்ளுவனும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத்தான். தொழாயிரத்து நாற்பத்து ஒன்பதாவது குறளிலிருந்து தொடர்ந்து ஆறுகுறள்களில் அவர் உண்மைகளைப் பரக்கக் காணலாம்.

மாதவிபற்றி மணிமேகலை ஆசிரியர் அவள் சமைக்கத் தெரிந்தவள் என்று பாராட்டுகின்றார் அவள் பல வகைக் கலைஞானங்களுடன் ''மடைநூல் செய்தியும் கற்றுத்துறை போகியவள்'' என்று குறிப்பிடுகின்றார். மனையியற்கலை வகுப்புக்கள் நடத்தப்படாத அக்காலத்திலேயே மாதவிக்கு ''ஹோம் சயன்ஸ்''(Home Science) சான்றிதழ் வழங்கிவிட்டார் அவர்.

இதேபோன்று மதுரையிலே கண்ணகி கோவலனுக்குச் சமையல் செய்து படைத்ததையும், பெருங்கவிஞன் இளங்கோ அடிகளும் அழகுற வர்ணிக்கத்தவறவில்லை.

புதுப்பானைகள், பலாக்காய், வெள்ளரிக்காய், கொம்மட்டி, மாதுளை, மாங்கனி, செந்நெல், அரிசி, பால், நெய் என்பவற்றை ஆய்ச்சியர் கண்ணகியிடம் கொடுத்தனர். மெல்விரல்கள் நோ எடுக்க, திருமுகம் வியர்க்க மலர்க்கண் சிவக்கப் பல்வகைப் பசுங்காய்கறிகளை வைத்தாள் கண்ணகி. வைக்கோலால் அடுப்பை எரித்தாள். சமைத்த உணவை கோவலனுக்குப் பரிமாறினாள் என்று சிலம்பு கூறுகின்றது. அரச பரம்பரையிலே பிறந்த இளங்கோ அடிகளும் கண்ணகியின் வைக்கோல் அடுக்களையை வர்ணித்திருக்கின்றார் என்றால் இதுபோன்ற சுவையன செய்தி ஏது?

நல்ல முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் போன்ற மெல்லிய விரலைக் கழுவாமல் தன் ஆடையில் துடைத்துக்கொண்டு தன் கண்கள் புகையேறும்படி தாளிதம் செய்து பண்ணிய குடும்பத் தலைவன் இனிதாயிருக்கிறது என்று உவந்து உண்பதைக்கண்டு அவளுக்கு உண்டாகும் உள்ள மகிழ்ச்சி அவளது முகத்தில்பொலிகின்றது. அவனும் வேம்பின் பைங்காயை அவள் தந்தாலும் அதனைக் கற்கண்டுக் கட்டியென ஏற்று அதனை உண்கின்றான்.

குறுந்தொகை 167

இவ்வாறு பற்பல கவிஞர்களும் அடுக்களையில் தலைவனும், தலைவியும் நன்கு சமைத்து உண்டதை கடைக் கண்ணால் கண்டு கவிதைக் கற்கண்டால் கவிபுனைந்து சென்றனர்.

## திக்கவயல்

இவ்வாறு பலகவிஞர்களும் கவிபுனைந்து சென்றதைக் கம்பரும் படித்திருக்கவேண்டும். அதனால் தன்காவியத் தலைவி சீதையும் நன்கு சமைப்பாள் என்பதைத்தெரிவிக்க அவரும்மறக்கவில்லை. ஸ்ரீராமனுக்கு சீதாபிராட்டி தானே உணவுசமைத்து உண்பித்தார். பின்பு இராவணனால் தூக்கிச் செல்லப்பட்டு அசோகவனத்தில் சிறை இருந்தபோது தன்கணவனுக்குத் தன்கையால் அன்னமிட முடியவில்லையே என அலறினாள்; துடித்தாள், பதைபதைத்தாள். அதனைக் கவிதையிலே தீட்டி உலாவவிட்டார் கம்பர்.

> ''விருந்து கண்டபோது என்னுறுமோ என
> மயங்கும்...''

என்ற கவிதை அடிகளால் ராமபிரான் தனக்கு மாத்திரமன்றி, தன்னிடம் வரும் விருந்தினரை எவ்வாறு உபசரிப்பார் என்று சீதை கலங்குவதாகக் குறிப்பிடுகின்றார். ''மருந்து ஆகினும் விருந்தோடு உண்'' என்ற தமிழ்ப்பண்பாடு சீதையை நினைக்கும்போது கம்பருக்குக் கைகொடுக்கின்றது.

தமிழிலே ஒரு பழைய நாடோடிப்பாடல் இருக்கின்றது. அதிலே எத்தனை விதமான உணவுகள் குறிக்கப்படுகின்றன. பாடல் இதோ:—

> ''பாண்டத்தைக் கழுவிப் பனிநீர் உலைவார்த்து
> முத்துப்போல் சோறு வடித்தாள் இளங்கொடியாள்
> அத்திபிறகு ஒடித்து, தித்திக்கப் பால்காய்ச்சி,
> புத்துருக்கு நெய்யும் பொன்போல் பருப்புக்களும்
> அதிரமும், தேன்குழலும், அறுசுவைப்பண்டங்களும்
> பத்துவிதக் கறியும் இயலான பல குழம்பும்
> முப்பழமும் சர்க்கரையும் அப்பளமும் தான்
> படைத்து
> ஆயாசம் தீரவே பாயாசம் கொடுத்தாளே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடா… இதில் உள்ள எல்லாம் விளங்கினலும் அந்தப் பதினெட்டுப் பச்சடியும் என்னவென்றே தெரியவில்லை. பழந்தமிழர் பாவித்த இசைக்கருவி யாழ் ஆராய்ச்சி செய்த விபுலானந்தர்போல் அந்தப் பதினெட்டுப் பச்சடியும் என்ன என்று ஆராய ஒருகவிஞன் பிறப்பானு என்று என்மனம் கேட்கின்றது.

பண்டைத் தமிழர் உணவுபற்றி பழந்தமிழ்ச் செல்வங்களை ஆராய்ச்சி செய்த உ. வே சாமிநாதஐயர் சில உண்மைகளைத் தருகின்றுர். அவர்தரும் பண்டைத் தமிழர் உணவுகள் சில.

| | |
|---|---|
| தேவர்களின் உணவு | அமுதம் |
| வயிருரச் சுவைத்துத் தின்பது | ஆர்பதம் |
| விலங்குகள் உண்பது | அல்கிரை |
| காகத்துக்குக் கொடுப்பது | பலி |
| கடவுளுக்கு நிவேதிப்பது | மடை |

தயிரைப்பிசைந்து செய்யும் குழம்பு -தீம்புளிப்பாகா இவை ஆராய்ச்சியின் பின்பு வெளிச்சத்துக்கு வந்த உணவுகள். அழிந்தவைபல.

பல குடும்பங்கள் குழம்பிப் போனமைக்குக் காரணம் தலைவிக்குச் சமைக்கத் தெரியாமை. சமைக்கத்தெரிந்த தன் மனைவி வாசுகி மறைந்தபோது வள்ளுவர், "அடிசிற் கினியாளே' என்றுதான்கதறி அழுதார். ஆகையால் குடும்பத் தலைவியரே சமையற்கலை பழகுங்கள். வாழ்க்கையை வெல்லுங்கள்.

---

## இன்தமிழ்

### குயில்

பம்பலப்பிட்டி வீதியோரமாக ஒரு முதியவர் வீர நடையுடன் சென்று கொண்டிருந்தார். கொஞ்சம் முன்னுக்குச் சென்று திரும்பிப்பார்த்தேன். வேறுயாருமல்ல. பிரபல ஆங்கில எழுத்தாளர் மலையகம் உலகுக்குத் தந்த சிறந்த கலைஞர் சி. வி. வேலுப்பிள்ளைதான். ஆர்வத்தோடு உரையாடினேன். ஒவ்வொரு கேள்விக்கும் மகிழ்ச்சியோடு பதில் தந்தார். " கலை இலக்கியங்களுக்குச் சட்டம் போடுவது சரியா? "என்று கேட்டேன். "குயில்பாடுகிறது. அதற்குக் கற்றுக்கொடுத்தது யார்? சமையல் கலையைப் படித்துக் கொண்டா அம்மா சமைக்கிருள்? குயிலின் இசையையும், அம்மாவின் சமையலையும் நாம் வெறுக்கிறோமா? இலக்கியங்களுக்குச் சட்டம் இருக்கவேண்டும் என்பது அவசியமல்ல. சட்டம் இருக்க வேண்டுமாயின் அது தானக அமைய வேண்டும்" என்று எழுச்சியோடு சொன்னர் அந்த 65 வயது நிரம்பிய எழுத்தாளர். சி. வி. வியின் VISMADGENEE (ஆங்கில கவிதை நாடகம்) வழிப்போக்கன் (வசனகவிதை) தேயிலைத் தோட்டத்திலே (ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழியிலும் வந்த கவிதை), உழைக்கப் பிறந்தவர்கள், வீடற்றவன், மலைநாட்டு மக்கள் பாடல்கள் ஆகிய சிருஷ்டிகள் நூலுருப்பெற்றுள்ளன. இவற்றைவிட " எல்லைப்புறம் ", "பார்வதி" "வாழ்வு" ஆகிய நாவல்களையும் எழுதியிருக்கிறர். "பாடமாட்டேன்…" "மனிதப்பண்டம்" ஆகிய புதிய நாவல்களையும் எழுதி வைத்திருக்கிறர். 1934 இலிருந்து எழுதத் தொடங்கிய சி. வி. வியின் எழுத்துக்கள் மலையகப் பிரச்சினைகளிற்கு சிறந்த கலை வடிவம் கொடுத்திருக்கின்றன. அவர் ஓர் தொழிற் சங்கவாதி, நிறைந்த அனுபவசாலி, அந்த அனுபவங்கள் எழுத்துக்களாகி உலக இலக்கியத்தை மேலும் அழகுபடுத்த வேண்டும்.

●——●

அண்மையில் கலாநிதி கே. இந்திரபாலாவோடு உரையாடிக் கொண்டிருந்தேன். நல்ல கருத்தொன்றை உதிர்த்தார். "தனது வரலாற்றை அறியாத சந்ததியொன்று தமிழினத்தில் உருவாகப் போகின்றது" என்பதுதான் அது. இன்று வரலாற்றுத் துறையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வரும் சிலரில் திரு. இந்திரபாலா குறிப்பிடத்தக்கவர். அவரது கூற்று முழுக்க, முழுக்க உண்மையானதுதான்.

"தற்போது தமிழர்களிடையே வரலாற்று ரசனை குன்றி வருகிறது. நாட்டமெல்லாம் எங்கெங்கோ செல்லுகிறது. வரலாற்றை நாம் இன்றைக்கு மறந்து வாழலாம். நாளைக்குத்தான் அதனது தாக்கங்கள் நமக்குப் புரியும்"

"வரலாறு மனித குலத்தின் பொதுச் சொத்து. அது சம்பந்தமான ஆய்வுகளில் நேர்மையும், சத்தியமும் இருத்தல் அவசியம்" "போர்த்துக்கேயர் காலக் கட்டடக் கலைக்கு உதாரணமாகத் திகழும் யாழ்ப்பாணக் கோட்டை தனது வரலாற்றுத் தன்மையை இழந்து வருகிறது. அது பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்" என்றெல்லாம் குறிப்பிட்டார்.

சரித்திரம் என்பது கட்டுக்கதையல்ல, அது இறந்த காலத்தின் பதிவு மனிதப்பண்பாட்டு வளர்ச்சியின் வேகத்தையும், தொய்வையும் கூட நாம் அதிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுகொள்ளலாம். அத்தகைய சிறப்புமிக்க வரலாற்றுக் கலையை நம்மவர் மறந்து வருவது உண்மையிலேயே அழகற்ற செயல்தான்.

0——0

குரும்பசிட்டியிலே ''சன்மார்க்கசபை'' என்ற அமைப்பு நீண்ட காலமாக இயங்கிவருகின்றது. அங்குதான் ''ஈழகேசரி''ப் பிரதிகள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்வையிடுவதற்காக அண்மையில் குரும்பசிட்டிக்குச் சென்றேன். எழில்கொஞ்சும் கிராமம் என்பதில் சந்தேகமேயில்லை.

சன்மார்க்கசபையில் பழைய ஈழகேசரிப்பிரதிகள் இன்றைக்கும் புதியபிரதிகள்போல இருக்கின்றன. பத்திரிகைகளைப் புரட்டியபோது இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈழகேசரி ஆற்றிய பணியை அளவிட்டுக்கொள்ள முடிந்தது. வாரப்பத்திரிகையான ஈழகேசரியில் இலக்கியத்துக்கே முதன்மைஸ்தானம் கொடுக்கப்பட்டிருந்தபோதும், சமகால நாட்டுநடப்புக்களையும் அச்சொட்டாகப் படம்பிடித்திருக்கிறார்கள் ஈழகேசரி தவிர இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து வெளியான பழங்காலச் சஞ்சிகைகளும் அங்கே பாதுகாப்பாக இருக்கின்றன இலங்கையில் ஆரம்பகாலத்தில் எழுந்த சஞ்சிகைகள் செம்மையான இலக்கியப்பணி ஆற்றியிருக்கின்றன. எனினும் அவற்றுள் சில இதழ்களைக் கண்ணுற்றுக்காணக்கூடமுடியாது. ஏனெனில் போதிய பாதுகாப்பின்றி அவை மடிந்துவிட்டன. அத்தகைய நிலைவராமல் இருக்க வேண்டுமாயின் இலக்கிய இதழ்கள், அவைபற்றியவேறு விடயங்கள் இவைகளைச் சேமிக்கவெனப் புதிய அமைப்பொன்று உருவாகவேண்டும். ஏனெனில் கொழும்பிலுள்ள தேசிய சுவடிக்கூடத்தில்கூட சில இதழ்களை எம்மால் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும்.

● அந்த டாக்டருக்கு நல்ல கைராசி... எல்லா நோயாளிகளும் அவரிடம்தானே போகிறார்கள்.

☐ கைராசியல்ல நல்ல முகராசி... அவருக்கு ஒரு பிரபல சினிமா நட்சத்திரத்தின் முகச்சாயல்.



ஒருவர்: வாடகைக்கு எடுக்கும் வீட்டிற்கு நான் அட்வான்ஸ் தரத்தயார்... வீடு ஒழுகுமா?

தரகர்: நான் கரண்டிபண்றன்... மழை பெய்யாதகாலத்தில் ஒருபோதும் ஒழுகாது.

— அதிமதுரம்



பாலு: என்னுடைய அப்பா ஓடிஓடி உழைப்பார்... செருப்பு தேய்வதில்லை.

வேலு: புதுமையாயிருக்கே.

பாலு: அவர்ஒரு ராக்ஸி டிரைவர்.

—நாகபூஷணி




மாமன்: மாப்பிளை எங்குப்போயிட்டு வாறீங்க?

மாப்பிளை: நீங்க தந்த வரதட்சணையை ஹோட்டலில் டிப்பொஸிட் பண்ணியிட்டு வருகிறேன்.

மாமன்: என்ன மாப்பிளை பேசிறீங்க!

மாப்பிளை: உங்க மகளுக்கு டான்ஸ், சங்கீதம், தையல்கலை என்று எல்லாம் கற்றுக் கொடுத்தீங்களே, சமையற்கலை கற்றுக் கொடுக்கவில்லையே.



ஒரு: டாக்டர்... எனக்குத் தும்மல் வரும் போதெல்லாம் எனக்கு கடன் தந்தவர்களின் ஞாபகம் வருகிறது தும்மல் வராமல் இருப்பதற்கு ஏதும் மருந்து தரமுடியுமா டாக்டர்.

டாக்டர்: ! ! !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீறல்

சூட்டலை மாதிரி, பஸ் ஸ்ராண்டும் ஒருநல்ல இடம் ஞானம்பிறப்பதற்கு - என்று பட்டது. இந்த அவதி, இந்தப்போட்டி, இந்த இடிபாடு நெரிபாடு எல்லாம் எதற்கு? கந்தோருக்குப் போவது எதற்கு? ஒவ்வொரு நாளும் இப்படி விழுந்தடித்துக் கண்டது என்ன? இந்தவேலை, இந்த வாழ்க்கை — எல்லாவற்றிலும் என்ன இருக்கிறது? கண்ட மிச்சம் என்ன?

இந்தக் காலைப்பொழுதுகள் எவ்வளவு அழகானவை. அதிலும் இந்தக் கோடைக்காலைப்பொழுதுகள்? — முக்கியமாக இந்த ஏழரை எட்டரைக் கிடைப்பட்ட இந்த நேரம்? இதை எப்போது அநுபவிக்க முடிந்திருக்கிறது? ஒவ்வொரு நாளும் முதல்நாள் அலுப்பில் ஆறுமணிக்குத்தான் எழும்ப முடிகிறது. அதுகூடப் பெரிய பாடு. ஆறுமணிக்கு எழும்பி, ஏழேகாலுக்குள் புறப்பட்டுவிட வேண்டும் என்று பறக்கிறது, என்றாலும், வெளிக்கிட எப்படியும் ஏழரையாகிவிடும்.

எந்தப்பாடுபட்டு ஓடினாலும் அரைவாசி நாட்களில் ரெஜிஸ்ரர் மூடப்பட்டு விடுகிறது; எட்டரைக்கோடு விழுந்துவிடுகிறது. தான்வெளிக்கிடுகிற நேரத்தை ஏழேகால் ஆக்கிப்பார்த்தான். ம் ஹீம் ஏழாக்கினால் கூடப்பலனிராது போலிருந்தது. பஸ்நேரம் அப்படி. ஏழுக்குப் புறப்படுவதற்கும் வித்தியாசமில்லை — அரைமணிநேரத்தை பஸ் ஸ்ராண்டில் வீணாக்குவதைவிட, பழைய மாதிரி ஏழரைக்கே வெளிக்கிடத் தொடங்கினான்.

ஒரு நாளைக்காவது குளித்த புத்துணர்ச்சி கெடாமல், மற்றவர்களின் வியர்வையையும் எண்ணெயையும் பூசிக்கொள்ளாமற் போக ஆசையாயிருந்தது. இன்றைக்கும் ஏழே முக்கால் ஆகிக்கொண்டிருக்கிறது. ஏழு முப்பத்தைந்து பஸ்ஸை இன்னமுங் காணவில்லை, கியூ இல்லாமல் கும்பல் கழுத்தை வளைத்து தெருத்தொங்கலைப் பார்த்தபடி நிற்கிற சனங்கள். காலை வெய்யிலுக்கு எதிராக குடைகள், புத்தகங்கள் கைப்பைகள், கைகள் எல்லா பஸ்களும் போய்க்கொண்டிருக்கின்றன, இந்த நம்பரைவிட,

இன்றைக்கு - எத்தனை மணியானாலும் !- ஆறுதலாகப் போவோம் என்று திடீரென்று எண்ணம் வந்தது. நெரியாமல், ஆறுதலாக ஒரு ஜன்னலடி ஸீற்றில் இருந்து எதிர்க்காற்று முகத்திலடிக்க சந்தோஷமாய்ப் போவோம்.

அந்த ஏழு முப்பத்தைந்து பஸ் இவ்வளவுநேரம் காத்துநின்றது - வந்தது; வழமைபோல நிரம்பி அடைத்துக்கொண்டு. ஏறாமல் நின்றான். நேரம் ஏழு ஐம்பது ஆறுதலாகப் போகக்கூடிய பஸ் எத்தனை மணிக்கு வருமென்று தெரியாமல் இருந்தது. எங்கிருந்தோ திடீரென்று கணேசன் ஓடிவந்தான். ஓடுகிற ஓட்டத்தில் ''ஏன், போகேல்லையா?'' என்றொரு கேள்வி. சொல்கிற மறுமொழி அவனுக்குத் தேவைப்படாது என்பதாலும், கேட்கிறமட்டும் அவன் நிற்கமாட்டான். என்பதாலும், ஒரு புன்சிரிப்புடன் மட்டும் நிறுத்திக்கொண்டான். கணேசன் ஒற்றைக்காலில் தொற்றிக் கொள்ளவும், இவனில்லாமலே அந்த பஸ்புறப்பட்டுப் போனது.

கூட்டம் குறையும்வரை இதிலேயே தூங்கிக்கொண்டு நிற்காமல் ஒரு ரீ குடித்துவிட்டு வரலாம் என்றுபோனான். கடையிலிருந்தும் பஸ்தரிப்பிடம் தெரிந்தது. இந்தப்போக்கில் ஆறுதலான பஸ் இப்போதைக்கு வராது என்று உணர்ந்தான். தேநீர் ஒருரூபா வெறும்கழநி.

புத்தகக் கடையுடன் கால் மணித்தியாலயம் போக்கியபோது ஒரு யோசனைவந்தது. தெருவைக் கடந்து மற்றப்பக்கம்போனான். எதிர்த் திசையில் போகிற அவன்


❋ சாந்தன் ❋

ரூட் பஸ் வந்துநின்றது. ரேமினஸுக்கு ஒருரிக்கற் ஐம்பதுசதம்.

அங்கு போய்ச் சேர்ந்தபோது எட்டேகால். ''இது எத்தினை மணிக்கு திரும்பி வெளிக்கிடும்?'' ''ஒன்பதுக்கு...'' என்றான் கொண்டாக்டர்.

மீண்டும்-அநாவசியமாய்இன்னொரு தேத்தண்ணி. எட்டு ஐம்பத்தைந்துக்கு அதே பஸ்ஸில் ஏறியபோது, ஏற்கெனவே இரண்டு பேர் தானிருந்தார்கள். வெய்யில் படாத பக்கமாகப் போய் உட்கார்ந்தான். ரிக்கெற் எடுத்தபோது, ''எல்லாமாக 3 ரூபா வீண்' என்று மனம்கணக்குப்போட்டது:

கந்தோருக்குப்போய்ச் சேர்ந்தபோது, ஒன்பதே முக்கால் ரெஜிஸ்ரர் இன்று அதிசயமாக மூடப்படாமலிருந்தது. அந்த வெங்காயம் லீவாயிருக்கவேணும் ஒன்பதே முக்கால் போட்டுக் கையெழுத்துவைத்தான். அரை நாள் லீவுபோட்டான்.



- ● அதில் போபவர் ஒரு டபிள் கிராட்யுயேட்.
- □ அப்படியா!
- ● ஆமா... பல்கலைக் கழகம் கொடுத்த பட்டம் ஒன்று பள்ளி மாணவர் கொடுத்த பட்டம் மற்றொன்று.

—அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலரசக் கலசம்

கலாபரணி

## இழந்த இராகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர்காலம் பக்தி இலக்கியம் வளர்ந்த காலமாகும். இக்கால கட்டத்தில் தோன்றிய சமயகுரவர்கள் பலநூற்றுக்கணக்கான பதிகங்களைப்பாடி பக்தி இலக்கியம் வளர ஊக்கம் அளித்தனர். பல இராகங்களிலும் பக்திப்பாக்கள் பாடப்பட்டனவாயினும் கல்யாணி, தோடி ஆகிய இருஇராகங்களிலும் பக்திப்பாக்கள்பாடப்பட்டபோது யாழே பின்னணி வாத்தியமாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனல் மேற்கூறிய இரு இராக நுட்பங்களையும் யாழில் வாசிக்க முடியாமையால் அந்தக் காலத்தில் இந்த இராகங்கள் பிரபலம் பெற்று இருந்தபோதும் பக்தி இலக்கிய கர்த்தாக்கள் இவற்றைப் பயன்படுத்த முன்வரவில்லை எனக்குறிப்பிடுகிருர்கள்.

## உதாரண புருஷர்கள்

தமிழ் உலகில் கவிதைக்குக் கம்பனையும், வெண்பாவுக்குப் புகழேந்தியையும் பாட்டுக்குப்பாரதியையும் அறிவுக்கு வள்ளலாரையும் உதாரணம் காட்டுவதுபோல ஆங்கிலேயரும் அழகிய ஆங்கில நடைக்கு அடிசனையும், வரலாற்ருசிரியர்களுக்கு மெக்கர்லேயையும் ஆராய்ச்சிப் புலமைக்கு மொம்சனையும் உதாரணம் காட்டுவர்.

## மொரிசியசில் தமிழர் பண்பாடு

தமிழ் வழங்கும் நாடுகளுள் மொரிசியஸ் ஒன்ருகும். இங்கு நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்ப்பண்பாட்டு மகாநாட்டை கௌரவிக்கும் முகமாக மொரிசியஸ் நாட்டு அரசாங்கம் அண்மையில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு தமிழ்ப்பண்பாட்டைச் சித்தரிக்கும் விதத்தில் முத்திரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## வாழ்க்கை

வாழ்க்கை என்ற ஒருபழைய திரைப்படத்தைப் பலரும் மறந்திருக்க மாட்டார்கள். பலகலைஞர்கள் தமது வாழ்க்கையில் ஒரேஒரு முறைமட்டும் பாடிய பாடல்கள் இந்தப்படத்திலிடம்பெற்றிருக்கின்றன. நடிகை வைஜயந்திமாலா, நடிகர் டீ. ஆர். ராமச்சந்திரன் போன்றவர்கள் பாடிய ஒருசில பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வரிசையில் மிக அண்மையில் காலமான பாடகர் மாரியப்பா வாழ்க்கைத் தத்துவத்தை மையமாகக்கொண்டு பாடியபாடல் ஒன்றும் இப்படத்தில் இடம்பெற்றது.

## ஆத்மீகஞானி இராமச்சந்திரா

ஈழத்தின் புகழ்பெற்ற ஆத்மீக ஞானிகளில் ஒருவராகவிருந்த காலஞ்சென்ற இராமச் சந்திரா அவர்கள் "Religious Digest" என்ற ஆங்கில ஆத்மீக சஞ்சிகையை வெளியிட்டு இந்துமதத்தைச் சாராதவர்களும் இந்து மதக்கோட்பாடுகளைப் புரியவைத்துப் பெருமைபெற்ருர். இவர் தற்போதைய உதவிப் பொலிஸ் மா அதிபர் சுந்தரலிங்கம், பிரபல கண்வைத்திய நிபுணர் பரராசசிங்கம் ஆகியோரின் தந்தையாராவார்.

## பாடலாசிரியர்

15ம் நூற்ருண்டில் வாழ்ந்த தலைப்பாகை அண்ணு மசர்யா அவர்கள் புகழ்பெற்ற கர்நாடக சங்கீதப் பாடலாசிரியராகும். இவர் தமது வாழ்நாளில் மொத்தமாக 32000 பாடல்களை இயற்ருர் எனக் கூறப்படுகின்றது. ஆனல் இன்று 14000 பாடல்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளன. இவரதுமகன் கவனமெடுத்து அவற்றை செப்புத்தகட்டில் பதித்து வைத்தமை காரணமாகவே இவை அழியாது பாதுகாக்கப்பட ஏதுவாயிற்று.

## மலர்சூடும் மாமன்னர்கள்

பூ வைப்பதில் பூவையர் மட்டும் பூரிப்படைவதில்லை. மலர் சூடுவதில் மன்னர்களும் மகிழ்கிருர்கள் ஒவ்வொரு பூ அரசபரம்பரைக் குரிய பூவாக விளங்குகின்றது. ஆங்கில நாட்டு அரசபரம்பரைக்குகிரிய மலராக ரோஜா மலர் விளங்குகின்றது. இதேபோல் பிரெஞ்சு நாட்டு அரசபரம்பரையினர் லில்லிப்பூவையும் ஸ்கொட்லாந்து நாட்டு அரச பரம்பரையினர் நெருஞ்சி மலரையும் சூடிக்கொள்கின்றனர்.

முடியுடைமூவேந்தர்களாக தென்ருட்டை ஆண்ட மூவரும் தமது அரச பரம்பரைக்குரியனவாக ஒவ்வொரு மலரைத்தேர்ந்தெடுத்துச் சூடிக்கொண்டனர். சேர அரசர்கள் பனம்பூவையும், சோழ அரசர்கள் ஆத்திப் பூவையும், பாண்டிய அரசர்கள் வேப்பம் பூவையும் சூடிக்கொண்டனர்.

---

ஒருவர்: என்ன இரண்டு தோள்களிலும் புத்தகம் சுமந்து செல்கிறீர்கள்?

மாணவன்: ஒன்று ரியூட்டரிப்புத்தகங்கள் மற்றையது பாடசாலைப் புத்தகங்கள்.

திக்கவயல்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காது அற்ற ஊசி

சினிமாப் பாடல்கள் மூலமாக தன்னை ஓர் கவிஞராக நிரூபித்த கண்ணதாசன், தனது தனிப்பாடல்கள் மூலமாகவும், ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி போன்ற காவியங்கள் மூலமாகவும், பொன்மழை. ஆனந்த ரகசியம், என்னும் பெயரில் வெளிவந்த பஜகோவிந்தம் போன்றவை மூலமாகவும் தன்னை ஓர் புலவராக தமிழ் இலக்கியப் பரப்பிலே நிலைநிறுத்திக் கொண்டார்.

ஆற்றுநீரோ அன்றி ஊற்றுநீரோ என்று அதிசயிக்கும்படியாக அழகுதமிழில் கவிதை வெள்ளம் அவரது உள்ளத்தில் இருந்து உருவாகி ஓடியது. அதனால் கவிஞர் கண்ணதாசன் எல்லோராலும் கவியரசர் என்று அழைக்கப்பட்டார். தமிழக அரசும் அவரது புலமையை மெச்சி ஆஸ்தான கவிஞர் என அமர்த்திக் கௌரவித்தது.

அந்தக் கவிக்குயில் அமரனாகிவிட்டது. அந்தஅமர கவியின் நினைவாக ஒருபாடலை இங்கே தருவது இவ்வேளையில் பொருத்தமானதாக இருக்கும் என்பதால் எழுதுகிறேன்.

''மாடுமனை தேடுவதும்''
வல்லநிலை கூடுவதும்
வாலிபம் இருக்கும் வரைதான்
வாசமொடு பாசமொடு
வந்துறவு நாடுவதும்
வரவுகள் நிலைக்கும் வரைதான்

கோடுவிழும் மேனிதனில்
கோடிநரை தோன்றியபின்
கூடுவது என்ன சுகமோ
கூடும்விற கூடுவெறுங்
கூடென வீழ்ந்தபின்னர்
கோவணமுங் கூட வருமோ.

ஆனந்த ரகசியம் என்றநூலில் அவர் எழுதியிருந்த கவிதையே இது. இந்தக் கவிதையில் ''கூடும் விறகூடு வெறுங்கூடு எனவீழ்ந்த பின்னர் கோவணமுங்கூட வருமோ'' என்ற வரிகள் வெகுசிறப்பான கவிவரிகளாக பொருள் பொதிந்தவையாக அமைந்துள்ளது.

பெருஞ் செல்வந்தராக பட்டினத்தார் இருந்த காலத்தில், அவரது மகன் ''காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே'' என்று எழுதிவைத்து விட்டுச் சென்றுவிட அதனைப்படித்த பட்டினத்தார் உலகையே வெறுத்துத் துறந்ததாக பட்டினத்தாரின் சரிதம் கூறுகிறது.

அதே கருத்தையே மேலே கவியரசர் விளக்கியிருக்கிறார். ஆனால் பட்டினத்தாரின் மகன் எழுதிய வசனத்திலும் பார்க்க உயிர்த்துடிப்புள்ள கவிவரியாக இருக்கிறது கவிஞரின் கற்பனை.

''காது அற்ற ஊசி'' என்பது எந்தவிதமான பயன்பாடும், பெறுமதியும் அற்றபொருள் என்பதையே குறிக்கிறது. எத்தனை பெருஞ்செல்வம் சேர்த்தாலும் காது அற்ற ஊசிகூட இறந்தபின் கூடவரப்போவதில்லை என்கிறார் பட்டினத்தாரின் மகன். ஆனால் கவிஞர் 'அதற்கு முற்றாக மாறுபட மொழிகின்றார்.

ஒருவனுக்கு மிகவும் அத்தியாவசியமான மானத்தைக் காக்கும் பொருள்ஆடை.. ஒரு கோவணத்துண்டு போதும் குறைந்த பட்சம் மானம்காக்க. அந்தத் துண்டுகூட இறந்தபின் கூடவரப்போவதில்லையே பின் என்ன செல்வம், வாழ்க்கை, உலகம் என்று தத்துவம் உரைக்கிறார் கவியரசர்.

''கோவணமும் கூடவருமோ'' என்று கவியரசர் கூறிய கருத்து மிகமிகப் பொருத்தமான முறையில் ஆத்மீகத் தத்துவங்களுக்கு அடிகோலுவதை படித்துப் படித்து இன்புறலாம்.

**அகளங்கன்**



## குட்டுக்கதை

எமதர்மராஜன் சோகமே உருவாக சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். சாத்தான் காரணம் விசாரித்தபோது எமன் 'பூலோகத்தில் ஒருநாட்டில் சமாதானமும் சாந்தியும் நிலவுகிறது. சண்டை சச்சரவில்லைசாவுமில்லை' என ஈனஸ்வர ஸ்தாயியில் பதில்கூறினான். அதற்கு சாத்தான் ''கவலையை விடுங்கள். நான்ஒரு அரசியல் வாதியின் மூளையுள் புகுந்துஆவன செய்கிறேன்'' எனத்தேற்றம் கூறியது. எமதர்மராஜனும் முறுவலித்தான்.

**மாதங்கி**

- முட்டாள், அறிவாளியின் வேட்டைப் பொருளாகிறான்; தூங்குபவன், விழித்திருப்போனின் வேட்டைப் பொருளாகிறான். — மாலய மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமுணர்ந்து இலக்கியம் பூப்பதில் சிரித்திரனுக்கு நிகர் சிரித்திரனே. அகளங்கனின் பாரதி, கண்ணதாசன் சந்திப்பு தேன்சிந்தும் பூவாக இருந்தது.

சிரித்திரன் வாசகர்களாகிய நாம் இப்படியான நிறைவுதரும் விஷயங்களை நிறைய எதிர்பார்கின்றோம்.

**செல்வி ஞானம்பிகை**
திருமலை.

சிரித்திரன் நிலைக்கண்ணாடி சிந்தனை நிலைக்களனாகவே இருக்கின்றது. சைனீஸ் பிக்டோரியல் பற்றிய கருத்து எம்மையெல்லாம் விழிக்கச்செய்தது. அதைப்படித்த பின்பு நான் சைனீஸ் பிக்டோரியல் சஞ்சிகைகளைப் பாதுகாக்க ஆரம்பித்துவிட்டேன்.

நெஞ்சை நெக்குருக வைக்கும் கதை ஆட்சிமுறை கே. ஆர். டேவிட் அவர்களுக்கு கைவந்த கலை. ''பரலோக ராட்சியம் பூமிக்கு வந்திடாதா'' என்றகதை என் இதயத்தை அழுத்தியது. அழவைத்தது.

**எஸ். பரமேஸ்வரன்**
தெல்லிப்பளை.




எல்லா அம்சங்களுடன் புதுஅம்சமாகிய கொத்தும் சேர்ந்து சிரித்திரனை ஒரு மலர்க்கொத்தாகவே குலுங்க வைக்கிறது.

**குமரபரன்**
வவுனியா.

இப்பொழுதெல்லாம் சிரித்திரபுரியில் 'லாவண்யா' என்ற ஓர் புதுக்கவி வீதிவலம் வந்துகொண்டிருக்கிறார். வரட்டும் வரட்டும் சிரித்திரனில் புதுப்படைப்பாளிகள் நிறையத்தோன்றட்டும்.

'தமிழ் சினிமா உலகில் சாவித்திரி சாஸ்வதமானவர்'' எனும் மணியவர்களின் படைப்பு எமையெல்லாம் கண்கலங்க வைத்தது. கலையை வாழவைத்தவரால் வாழ்க்கை வாழமுடியாமல்போய் விட்டதே! மணியவர்கள் சினிமாவைப்பற்றி எம்மையெல்லாம் சிந்திக்க வைக்கும் கட்டுரைகள் புனைந்தால் என்ன?

**செல்வி உஷா நந்தினி**
மானிப்பாய்.

மகுடியின் பதில்கள் கற்கண்டு. சிரித்திரனில் கற்கவேண்டியபகுதி சங்கானை சிரித்திரன் வாசகியின் கேள்விக்கு அளித்தபதில் மகுடியின் பதில்களுள் மகுடமாக அமைந்திருந்தது.

**ஹனிபா**
கல்முனை.

## பென்சிலும் நடிக்க வேண்டும்

''ஒரு நல்ல நாடகத்தில் பென்சில்கூட நடிக்கவேண்டும்! நாடக மேடையில் உணர்ச்சிபூர்வமான நடிப்புக்குச் சம்மந்தமில்லாத எந்தப்பொருளும் இருக்கக் கூடாது. மேடையில் நடமாடிப் பேசி உயிரூட்டும் நடிகர்களை அங்கே ரசிகர்களின் பார்வைக்குத் தெரியும் ஒவ்வொரு பொருளும் ஒரு உணர்ச்சியைக் காட்ட வேண்டும்'' இப்படிச் சொல்கிறார் ரங்கனாத் பரத்வாஜ் இவர் பம்பாய் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கிறார்.

## மகாத்மா காந்தி குடும்பமும் பத்திரிகை உலகமும்

மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகை, யங் இன்டியா ஆகிய பத்திரிகையின் ஆசிரியராகஇருந்தவர். அவரின் மகன் மணிலால் காந்தி தென் ஆபிரிக்காவில் 'இந்தியன் ஒப்பீனியன் என்ற பத்திரிகையை நடத்தினார், மணிலால் காந்தியின் மகன் அருண்காந்தி டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் துணைஆசிரியராக இருந்தார் காந்தியின் இளையமகனாகிய தேவதாஸ் காந்தி ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை ஆசிரியராக கடமையாற்றினார். இவரது மகன் ராஜ்மோகன்காந்தி இன்று 'ஹித்மத்'பத்திரிகை ஆசிரியராக இருக்கின்றார்.

## சகாப்த புருஷர்கள்

வன்முறையில் நிர்மாணிக்கப்பெறும் எதுவும் நிலைத்துநிற்க முடியாதுஎன்பது எனதுதிடமான கருத்து. எனதுகருத்து எவ்வாறிருந்த போதிலும், போல்ஷவிக் லட்சியம் தனக்கு பின்னால் அந்த லட்சியத்துக்காகத் தமது சர்வத்தையும் தியாகம்செய்த எண்ணற்ற ஆண் பெண்களின் புனிதமான தியாகத்தைக் கொண்டுள்ளது. என்பது மறுக்கமுடியாத உண்மை. லெனினைப்போன்றமகா புருஷர்களின் தியாகங்களால் புனிதமெய்தியுள்ள ஓர் லட்சியம் வீணாகமுடியாது; அவர்களது உன்னதமான சர்வ பரித்தியாகத்தின் உதாரணம் என்றென்றும் ஒளி பரப்பிவரும்; துரிதப்படும்;காலம் செல்லச்செல்ல அந்தலட்சியத்தை புனிதப்படுத்தும்.


மகாத்மாகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்பொழுது

செவ்வி கண்டவர்கள்
பொன் பூலோகசிங்கம்
கனக சுகுமார்



செல்வி மாலினி ஸ்ரீநிவாசன்

---

**"வீணுகானபுரம்" என யாழ்ப்பாணம் புகழ்பெற்றது. அங்குள்ள உடுவில் எனனும் கிராமத்தில் பிறந்து, இராமநாதன் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கல்வி கற்றுக் கொண்டபின், தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு கலாஷேத்திரத்திலும் பின்னர் சென்னை அரசினர் இசைக்கல்லூரியிலும் சங்கீதம் கற்று வாய்ப்பாட்டிலும் வீணையிலுமாக இரு சங்கீத வித்துவான்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டபின், மேலும் ஒருவருடம் கற்று சங்கீத டிப்ளோமா பட்டமும் பெற்றுக்கொண்டு ஈழம்திரும்பி இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் வீணைவிரிவுரையாளராகக் கடமையாற்றும் செல்வி. மாலினி ஸ்ரீநிவாசன் அவர்கள் அளிக்கும் செவ்வி இங்கேஇடம்பெறுகின்றது.**

---

கே: இசைவாத்தியங்கள் பல இருக்க நீங்கள் வீணையைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன?

ப: நான் ஆரம்பத்தில் வயலின் கற்றுக்கொள்ளவே விருப்பமுற்றிருந்தேன். ஆனால் எனது தந்தையார் வீணை ஒரு தெய்வீக வாத்தியமாகையால் இதனைக் கற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியபடியால் வீணையைப் பயின்றேன். அவ்வாறு கற்றமையால் இப்போது மகிழ்ச்சியடைகிறேன்.

கே: உங்களுக்கு வீணைகற்றுத்தந்த உங்கள் குருயார்?

ப: எனது தந்தையார் புல்லாங்குழல், வீணை இரண்டும் பயின்றுவந்தார். ஆனால் அவர் அரசாங்க நிர்வாக சேவையில் இருந்தபடியால் அவருக்குப் போதியநேரம் கிடைக்கவில்லை. இதனால் அவர் எனக்கு வீணையைப் பயிற்றுவிக்க விரும்பினார். ஆரம்பப் பாடங்களை நான் அவரிடமே கற்றுக்கொண்டேன். அதன்பின் சென்னை அரசினர் இசைக்கல்லூரியில் வீணை வித்துவர்ன்களிடமும் முக்கியமாக தஞ்சை சிவானந்தம் அவர்களிடம் வீணை பயின்றேன்.

கே: வீணை வாசிப்பதிலும் வாய்ப்பாட்டிலும் நீங்கள் வல்லமை பெற்றவர் என அறிந்தோம். இந்தியாவில் வீணை வித்துவாட்டி லலிதா வெங்கட்ராமன் அவர்கள் வீணை வாசித்தும் பாடியும் இசைஉலகை வியக்க வைத்தாரே! நீங்கள் அப்படிச் செய்தால் என்ன?

ப: வாய்ப்பாட்டையோ, வீணையையோ வாசிக்கும்போது முழுக்கவனத்தையும் அதிற்செலுத்தி மனோதர்மத்தை வளர்த்துப்பாடவோ, வாசிக்கவோ வேண்டும். இரண்டையும் ஒரே நேரத்தில் செய்வது இசையின் தரத்தைப்பாதிக்கும். இடைக்கிடை வீணையோடு சேர்ந்துபாடி, சாகித்தியத்தை இரசிகர்கட்கு விளங்க வைக்கலாம். அவ்வாறு இடையிடையே வீணை வாசிக்கும்போது நான்செய்வதுண்டு. எந்த வாத்தியத்தை வாசிப்பவரானாலும் வாய்ப்பாட்டுத் தெரிந்தவராக இருக்கவேண்டும்.

கே: வீணை ஒருஆதி வாத்தியம். அதற்கென ஏதாவது தனித்துவமான சிறப்பு இருக்கின்றதா?

ப: தமிழ் மக்களின் இசைமிகப் புராதனமானது. சிலப்பதிகாரத்தில் யாழ்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வள்ளுவரும் "குழலினிது யாழினிது" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி இருக்கிறார். வீணை இப்போது இருக்கும் உருவில் சமயகுரவர் காலத்தில் தோன்றியிருக்கிறது. பாடல் வீணையர், யாழினர் என இருவகை வாத்தியங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. கலைவாணியின் கையில் இருக்கும் பெருமைபெற்றது. மிகத் தெய்வீகமான இந்த வாத்தியம் இல்லத்திற்கு இலட்சுமீகரத்தை அளிக்க வல்லது. இதை நன்றாகப் பயின்று வாசித்தால் உள்ளத்தை உருக்கி தெய்வீகப் பேரானந்தத்தைத் தரவல்லது.

வீணையில் இரண்டு ஸ்தாயி ஒரேநேரத்தில் வாசிக்கலாம். இரண்டுபேர் இணைந்து பாடுவதுபோல இருக்கும். தானம் வாசிக்க வீணைதான் சிறப்பானது. தாளத்தந்தி மூன்று இருக்கிறது, சுருதி பிழைக்காமல் தாளம்போட்டு வாசிக்க தாளத்தந்தி உதவுகின்றது. வீணையில் இருக்கும் அனுசுரங்கங்கள் போல் (Micro - Tones) வேறு எந்த வாத்தியத்திலும் இல்லை. மனித உடலில் இருக்கும் அங்கங்களின் அமைப்புக்கு ஒப்பாக வீணையின் அமைப்பு அமைந்திருக்கிறது.

கே; பல வீணைகளை வைத்துக்கொண்டு மேடைகளில் கச்சேரி செய்கிறார்களே! இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

ப: பல வீணைகளை வைத்துக்கொண்டு மேடைகளில் செய்வதைக் கச்சேரி என்று சொல்லமுடியாது. அது வெறும் காட்சிப்பொருள் மட்டுமேயாகும். யார் சரியாக வாசிக்கிறார்கள், யார் கையை அசைக்கிறார்கள் என்று கூடச்சொல்லமுடியாது. கர்நாடக சங்கீதம் தனித்தன்மை வாய்ந்தது. Melody என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். மேலைநாட்டுச் சங்கீதம் Harmony சங்கீத வகையைச் சார்ந்தது. முன்னையது தனி ஒருவரின் வாய்ப்பாட்டையோ வாத்தியத்தையோ கொண்டு மனோதர்மத்தினால் உள்ளத்தை உருக்குவது. மற்றையது பல வாத்திய நாத சேர்க்கையால் மாயா ஜாலங்களைச் செய்வது. கர்நாடக சங்கீதம் தெய்வீகமானது. இந்த இசையில் ஓரளவு அறிவுள்ளவர்கள் மட்டும்தான் அனுபவிக்க முடியும். மேலைநாட்டு இசை லௌகீக உணர்ச்சிகளை மட்டும் தூண்டுவது இதனைப் பாமரர் அனுபவிக்கலாம். சாஸ்திரிய சங்கீதத்தை இரசிக்க இசை அறிவுவேண்டும்.

கே: திரை உலகில் பின்னணி சங்கீதத்திற்கு வீணை எப்படி உதவுகின்றது எனக்குறிப்பிட முடியுமா?

ப: திரை உலக சங்கீதத்தைப்பற்றி யான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அது எந்த இசைவகையையும் சேர்ந்ததல்ல. 'சாஸ்திரிய கர்நாடக சங்கீதம்' என்ற ஒப்பற்ற இசை எமக்கிருக்க திரைஉலக சங்கீதத்தைக் கேட்பது விண்ணில் இரவிதனை விற்று விட்டு மின்மினி கொள்வது போன்றது. வீணையை திரையுலக இசைக்குப் பாவிப்பது பொன்னின் குடத்தில் கள்ளைச் சேர்ப்பதைப் போன்றது.


கே: வீணை தனம்மாள் இசை உலகிற்கும் பெரும்சேவை ஆற்றியிருக்கிறார். அவருடைய தனித்துவமான கலாவித்துவத்தன்மையைப் பற்றி எமக்கு எடுத்துக் கூறமுடியுமா?

ப: வீணைத் தனம்மாளைப்பற்றி எனக்கு நேரில் தெரியாது. பல வித்துவான்கள் அவரது வீணை வாத்தியத்தை மிகவும் புகழ்ந்து பேசக்கேட்டிருக்கிறேன், அவரது வாசிப்பில் மாயா ஜாலங்கள் கிடையாது. ஒரே ஸ்தானத்தில் தந்தியை இழுத்து வாசித்து உள்ளத்தை உருக்கி விடுவார், என்று சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை அவர்கள் குறிப்பிடுவார்கள்.

கே: இன்றைய முன்னணி வீணை வித்துவான்களாகிய சிட்டிபாபு, எஸ். பாலச்சந்தர், கே. பி. சிவானந்தம் போன்றவர்களைப் பற்றிக்குறிப்பிடமுடியுமா?

ப: சாஸ்திரிய சங்கீதத்தை மட்டும் வீணையில் வாசிப்பவர்கள் எஸ். பாலச்சந்தர், கே. எஸ். நாராயணசாமி, கே. பி. சிவானந்தம், ரமணி சங்கர சாஸ்திரிகள் போன்ற வீணைவித்துவான்களாகும், ஆனால் சிட்டிபாபு அவர்களோ சாஸ்திரிய சங்கீதத்தோடு சாதாரண மக்களுக்காகவும் வீணையை வாசிக்கிறார். இதைச் சங்கீத மேதைகள் ஏற்பார்களோ என்னவோ எனக்குத்தெரியாது.

கே: வீணை வாத்தியத்தைக் கற்றுக்கொண்டு மேலைநாட்டவர் யாராவது கச்சேரி செய்கிறார்களா?



ப: அமெரிக்க நாட்டவரான திரு. டேவிட் அல்பேட் அவர்களுடைய கச்சேரி இந்தியாவிலும் ஈழத்திலும் நடைபெற்றிருக்கிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: இசைஞானம் வளர்வதற்குக் கேள்வி ஞானம் அவசியம் என்கிறீர்கள். சங்கீதக் கச்சேரிகள் அடிக்கடி இடம் பெறாத எமது சூழலில் இக்குறையைப் போக்குவது எப்படி?

ப: கேள்வி ஞானம் அறுபது வீதமும் கல்வி ஞானம் நாற்பது வீதமும் அவசியமாகும். யாழ்ப்பாணத்தில் அடிக்கடி கச்சேரிகள் இடம்பெறாமை பெரும் குறையாகும். கலைஞர்கள் தங்கள் கலையை வளர்க்க அடிக்கடி கச்சேரி செய்யும் சந்தர்ப்பம் வேண்டும் பத்திரிகைகள் கொலை, கொள்ளை முதலியவற்றிற்கே முதலிடம் அளிக்கிறார்கள். இசையைப் பற்றி நல்ல விமர்சனம் எழுதக் கூடியவர்கள் இங்கு மிக மிகக் குறைவு.

கே: எல்லோரும் நித்திரைக்குப் போன பின்னர்தான் இரவில் இலங்கை வானொலியில் கர்நாடக சங்கீதத்தை ஒலிபரப்புகிறார்கள். இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: இந்திய வானொலியும் ஒலிப்பதிவு நாடாக்களும் தான் எமக்கு இப்போது தஞ்சமளிக்கின்றன. இலங்கை வானொலியில் சாஸ்திரீய சங்கீதத்திற்கு முக்கிய இடம் அளிப்பதில்லை. இதனால் தான் மக்கள் உறங்கும் நேரத்தில் இரவு 10-15 க்குப் பின் சில வேளைகளில் கச்சேரிகளை ஒலிபரப்புகிறார்கள். இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

கே: ஒரு இசைக்கருவியில் வித்துவானாகவிருப்பவர் வேறு இசைக்கருவிகளிலும் தனது வித்துவத்தன்மையைக் காட்ட முடியுமா?

ப: ஒருவர் இரண்டு தந்தி வாத்தியங்களைக் கற்றுக் கொள்வதைவிட தாம் கற்றுக் கொள்ளும் தந்தி வாத்தியத்தோடு பிறிதொரு காற்று வாத்தியத்தைக் கற்றுக் கொள்ளலாம். உதாரணமாக, வீணை கற்பவர் அத்தோடு புல்லாங்குழலைக் கற்றுக் கொள்ளலாம். ஏனெனில் வீணை வாசிப்பதற்கு மென்மையான விரல்கள் தேவை. மிருதங்கம் கற்றுக் கொண்ட ஒருவர் வீணை மீட்டும் போது அதிலிருந்து இனியநாதம் எழுதல் மிகவும் சிரமமே. எந்த வாத்தியத்தைக் கற்றுக் கொள்பவரானாலும் கட்டாயமாக வாய்ப்பாட்டுத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

கே: உங்களுக்குப் பிரியமான ராகம் எது எனக் கூற முடியுமா?

ப: இராகங்களில் இது நல்லது அது நல்லது என்று சொல்ல முடியாது. சில ராகங்கள் விஸ்தாரமாக ஆலாபனை செய்யக் கூடியவை. தோடி, கல்யாணி, சண்முகப்பிரியா போன்றவை எனக்கு மிகவும் பிடித்தமானவை.

கே: நீங்கள் வெளிநாடுகளில் கச்சேரி செய்திருக்கிறீர்களா?

ப: இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் மேடைக் கச்சேரியும் சிங்கப்பூரில் வானொலியிலும் தொலைக் காட்சியிலும் கச்சேரி செய்திருக்கிறேன்.

கே: ''வீணைக் கொடியுடைய வேந்தன் இராவணன்'' ஆண்ட மண் இந்த ஈழத்து மண். இந்த மண்ணில் இன்று வீணை வாத்தியத்தின் வளர்ச்சி எப்படி இருக்கிறது?

ப: இலங்கையில் இப்போது வீணை பயின்ற சிலர் இருக்கிறார்கள். வீணை வாத்தியத்தில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வீணை மிகக் கடினமான ஒரு வாத்தியம். பல ஆண்டுகள் பயில வேண்டும். வீணையைக் காட்சிப் பொருளாக்கிக் கொண்டு பத்துப்பதினைந்து வீணையை மேடையில் வைத்துக் கலையை வளர்க்க முடியாது.

கே: வீணை பயிலும் மாணவர்களுக்கு நீங்கள் கூறக் கூடிய ஆலோசனைகள் யாவை?

ப: வீணை பயிலும் மாணவர்களுக்குத் தெய்வ பக்தி இருக்க வேண்டும். வீணை பயின்று வாசிப்பதை ஒரு யோக சாதனையாகக் கொள்ள வேண்டும். வீணை பயிலுமுன் வாய்ப்பாட்டைப் பயின்று நல்ல வாய்ப்பாட்டு ஞானம் இருக்க வேண்டும். வீணை பயின்று முன்னேறக் கூடிய சூழ்நிலை வீட்டில் இருப்பவர்கள் ஊக்குவித்து வீணையை ரசிக்க வேண்டும். நல்ல குருவிடம் பயில வேண்டும். நாளும் இரண்டு தொடக்கம் நான்கு மணித்தியாலங்கள் வரை சாதகம் செய்தல் வேண்டும். இதற்கெல்லாம் இறைவனது அருள் வேண்டும்.

நன்றி கலந்த வணக்கம்



ஒருவர்: என்ன சார் கவலையோடு இருக்கிறீங்க.

அரசியல்வாதி: அந்தக்காலம் போல் இன்று ஹூட்டமடித்தகார் இல்லையேஎம்மை ஊர்வலமாய் அழைத்துச் செல்வதற்கு.

— விவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராயிரம் பாரதி ஒன்ருக வரவேண்டும்

**சிவசக்தி**


சமத்துவ உலகின் புதுஒளி தேடிச்
சத்தியத் தீயில் நித்தமும் குளித்துச்
சாவையும் வென்ற சரித்திரம் படைத்துப்
பாவிலே வாழ்பவன்; பூமியில் எங்கும்
வரட்சியைச் சாடினுன் வறுமையைப் போக்கப்
புரட்சியாய்ப் பாடினுன்; புதுமையை வேண்டினுன்.

புதுமைகள் தவறிய பாதையில் செல்லப்
பொதுமையே இல்லாப் புரட்சியைப் பேசும்
போலிகள் வளரப் போர்வைகள் போர்த்தி
வேலியே வேட்டை ஆடுது; வீட்டில்
கறையான் பெருகிடக் குடிசையை விட்டே
மறைந்திட முயலும் கோழைகள் பெருகிருர்.

சிந்தனை செயல் சொல்லிலே நேர்மையைத்
தந்திரம் வெல்லுது; தரணியில் இன்றே
வார்த்தையே மலியுது; வாய்ச்சொல் பெருகுது;
போர்களும் பொருமையும் போட்டியாய் வளரக்
கலகம் பெருகிக் கலக்கமே மிகுதியாய்
உலகம் மயங்குது; உணர்வுகள் தூங்குது!

அன்ருெரு பாரதி எழுப்பிய கவித்தீயில்
ஒன்றல்ல; இன்றிங்கே ஓராயிரம் பாரதி
ஒன்ருக எழவேண்டும்! ஓங்கிக் குரலெடுத்து
ஒன்று சொல்லட்டும்! புகழுக்குப் பாடாமல்
உழைப்பையே பாடுவோம்! துயர்களால் வளர்ந்த
களைப்பையும் வென்று சமத்துவம் தேடுவோம்!

கதைத்தேன்



## பேர்போனவர்

நாட்டின் தியாகச் சுடர் அணைந்துவிட்டது. அவருக்கு அஞ்சல் செய்யும் முகமாக பல கவிதைகள் பத்திரிகைக் காரியாலயம் வந்து குவிந்தது.

ஒருகவிதை ஆசிரியர் கண்களைக் குளமாக்கியது. அதைபிரசுரிக்கும்படி ஆசிரியர் அச்சுக் கோர்ப்பாளரிடம் பணித்தார். அவர்கண்களிலிருந்தும் கண்ணீர் பெருக்கெடுத்தது. கவிதையும் பத்திரிகையில் பிரசுரமானது. படித்தவர்களெல்லாம் பாகாயுருகினர்.

ஆனல் ஒருவரின் கண்களிலிருந்து மட்டும் அனல்வீசியது. பத்திரிகையில் வழக்கும் தொடர்ந்தார்.

அவர் வழக்குத்தொடர்வதற்குக் காரணம்—கவிதையின் கீழ்அவரது பெயர் பிரசுரமாகவில்லை என்பதுதான்.


**தேனுகா**

# பாரதிக்குப் பிடிக்காதது — இந்தியா

நமது தாய்நாடு ''இந்தியா'' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நாட்டின் மீது படையெடுத்து வந்த அன்னியன் எவனே சிந்து நதியை நினைத்துக்கொண்டு அதைச் சரிவரச் சொல்லமுடியாமல் உளறினன். அதுவே 'இந்தியா' என்று திரிந்துவிட்டது இந்தப்பெயர் பாரதியாரைக்கவரவில்லை. தன் பாடல்களில் மூன்றே பாடல்களில்—ஆறே இடங்களில் — 'இந்தியா' என்னும் பெயரைப் பாரதியார் பயன்படுத்தி யிருக்கிருர். மற்ற எண்ணற்ற கவிதைகளிலே நூற்றுக்கு மேற்பட்ட இடங்களிலே தன் தாய் நாட்டை பாரதம் - பாரத நாடு - பாரத தேசம் - பாரத பூமி - ஆரியநாடு- ஆரிய தேசம் - ஆரிய பூமி என்றெல்லாம் பெயர் சொல்லி அழைக்கிருர்.

**ம. பொ. சி.**

# இல்லாள்



என்
சம்சாரம்—
ஆம்...
சம்பளதினத்தன்று
தேன்குடம்
சம்பளம்
தீர்ந்துவிட்டால்
தேள்விடம்.

—வர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா மாருதம்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேசக்கிளையின் தலைவரான தமிழ்த்திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் மலேசியாவின் புகழ்பெற்ற எழுத்தாளராகும். அரசியல், பொருளியல், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் பல நூல்களையும், நூற்றுக் கணக்கான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அத்தோடு மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ் இலக்கிய கழகம். மலேசிய தமிழர் கல்வி வளர்ச்சி கழகம் போன்ற பல அமைப்புகளில் பொறுப்புவாய்ந்த பதவிகளை வகித்து பல பொதுப்பணிகளும் புரிந்து வருகின்றார். இவர் சிரித்திரனுக்காக தொடர்ந்து "மலேசிய மாருதம்" என்ற இப்பகுதி படைக்க விரும்புகிறார், இவ்வாறாக ஈழத்திற்கும் — மலேசியாவிற்கும் இடையில் கலைப்பாலம் அமைக்க விரும்பும் அவரது உயர்ந்த கருத்தை சிரித்திரன் வரவேற்கிறான்.

— ஆசிரியர்

## இசை நிகழ்ச்சிகள்

ஆண்டுதோறும் சங்கீதாலயம் இங்கே இசைவிழாக்களை நடத்தி வருகின்றது. இவற்றை விட கலைக்கோலம், கலைஇரவு போன்ற பெயர்களில் கலைநிகழ்ச்சிக் குழுவினர் கதம்ப நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். இவ்வாறான ஒரு பாடகர் குழுவினரான இசைமலர் குழுவினர் இசைப்பயிற்சி பெறும்பொருட்டு தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ளனர். இவ்வாறானதொரு இசைக் குழுவில் பாடிவந்த பாடகர் தில்லைவாணர் என்பவர் இப்போது தமிழக திரைப்படங்களில் பாடுவதற்காக தமிழகத்திற்குச் சென்றுள்ளார்.

## நாடகம்

இம்மாதம் தமிழக நாடகக்கலைஞர் ஆர். எஸ். மனோகர் அவர்களின் ஆறுநாடகங்கள், பினாங்கு, கோலாலம்பூர் ஆகிய இடங்களில் மேடையேற்றப்படுகின்றன. இத்துடன் மலேசியத் தமிழர் கலை மன்றத்தின் தலைவரான அமரர் ஆழி அருள்தாசன் எழுதிய 'மின்னொளி'' என்ற நாடகம் மீண்டும் முழுநேர நாடகமாக மேடையேற இருக்கின்றது.

## நூலகம்

மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பகுதிகளில் தமிழ் நூலகங்களை அமைக்கும் முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களது சங்கங்கள் இதற்குப் பேராதரவு தர முன்வந்துள்ளன.

## மலேசிய அமைச்சரவை

மலேசியாவில் மொத்தம் பத்து இலட்சம் தமிழர்கள் வாழுகின்றார்கள். ஒரேயொரு தமிழரான டத்தோ சாமிவேலு என்பவரும் மலையாளியான கு. பத்மநாபன் அவர்களும் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். 'தேசிய முன்னணி'' என்றகட்சி ஆளும் கட்சியாகவுள்ளது. "இந்தியர் காங்கிரஸ்'' என்ற தமிழர் அமைப்பு ஆளும் கட்சியின் ஒரு அங்கமாகவுள்ளது. எதிர்க்கட்சியில் பல தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

## பத்திரிகைகள்

மலேசியாவில் தமிழ்நேசன், தமிழ் ஓசை, தினமணி ஆகிய மூன்று நாளேடுகள் வெளிவருகின்றன. வாரம் இருமுறை சங்கமணியும், வார இதழாக வானம்பாடியும் வெளிவருகின்றன. புதிய சமுதாயம் உதயம் என்பன மலேசியாவிலிருந்து வெளிவரும் மாதச்சஞ்சிகைகளாகும்.

இரு வாரத்திற்கு ஒருமுறை மலேசிய தொலைக்காட்சியில் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

## கல்வித்திட்டம்

இப்போது மலேசியாவில் மிகவும் சூடுபிடித்துள்ள விடயம் புதிய கல்வித்திட்டமாகும். இந்தத்திட்டம் தொடர்பாக இப்போது இங்கே பல கருத்தரங்குகளும் விமர்சனங்களும், ஆய்வுகளும் இடம்பெற்று வருகின்றன. "மூன்று ஆர்'' என அழைக்கப்படும் இப்புதிய கல்வித்திட்டத்திற்கு மலேசிய மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது.

## திருமண பாதுகாப்புச் சட்டம்

மலேசியாவில் வாழும் இஸ்லாமியரல்லாத ஏனைய சமயத்தவர்களின் நலன்கருதி அரசாங்கம் இம்மாதம் ஒருபுதிய சட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவருகின்றது. இதற்கு இஸ்லாமியரல்லாதார் திருமணப் பாதுகாப்புச்சட்டம் எனப்பெயரிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் விளைவாக வைதிகத் திருமணமுறை, தமிழர் திருமணம் சீர்திருத்த திருமணம் என்பவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்படவிருக்கின்றன. அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவிலக்குச் சட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றத்தினால் தமிழர்களுக்கு நல்ல பயன்கள் ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மெட்றிக் அளவுமுறை

இந்த ஆண்டு தொடக்கம் மலேசிய அரசாங்கம் புதிய மெட்றிக் அளவுமுறையை நாடுபூராவும் அமுலாக்கியுள்ளது.

## சிங்கப்பூர்

சிங்கப்பூரில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் வாழுகின்றார்கள். கல்லூரிகளில் தமிழ் ஒரு கட்டாய பாடமாகவுள்ளதோடு சிங்கப்பூரின் நிர்வாகமொழிகளில் தமிழும் ஒன்றாகும்.

சிங்கப்பூரில் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சியிலும் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தரமான தமிழ்க் கலைப்படைப்புகள் வெளிவருகின்றன. திரு. ரெ. சண்முகம் என்பவரின் இசைநிகழ்ச்சியும், திரு. சே. வெ. சண்முகம் அவர்களின் நாடக நிகழ்ச்சிகளும் அடிக்கடி இங்கு இடம்பெறுகின்றன. மேடையிலும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

சிங்கப்பூரின் மிகப்பெரிய தமிழர் கழகமான தமிழர் பேரவை மற்றும் தமிழர் இயக்கம், தமிழ் எழுத்தாளர் கழகம் என்பன சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை ஆரம்பிக்கப்படவேண்டும் என்றுகோரி தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. பாவலர் முல்லைவாணன் சிங்கப்பூரில் வாழும் தமிழர்களுக்காக பெரிதும் உழைத்துவருகின்றார்.

மலையமான்

## மாதம் ஒரு மணிக்கவிதை

பாரதி நூற்றாண்டுடன் தொடங்கும் இப்பகுதி தொடர்ந்தும் சிரித்திரனில் நிரந்தரமான இடத்தைப் பெறவுள்ளது. இப்பகுதிக்கு உங்கள் விருப்பப்படி எந்தவொரு விடயத்திலும் உருவாக்கப்படும் படைப்புக்களையெல்லாம் அனுப்பலாம்.

வாசக நேயர்கள் படைப்பாளிகளிடமிருந்து மாதாமாதம் சிரித்திரன் சிறந்த மணிக்கவிதைகளை எதிர்பார்க்கிறான்.

ஒவ்வொரு மாதத்திலும் கிடைக்கும் கவிதைகளுள் சிறந்த ஒன்று இப்பகுதியில் பிரசுரமாகும். சிறந்த அந்தக் கவிதைக்கு ரூபா 10 சன்மானமாக அனுப்பி வைக்கப்படும். மற்றைய கவிதைகளும் தரம்கண்டு பிரசுரமாகும் பாக்கியத்தைப் பெறும்.

சிறந்த கவிதைக்கான சன்மானத்தை மாதாமாதம் இணுவில்

**திரு ஆ. க. செல்வநாயகம்**

அவர்கள் தொடர்ந்தும் வழங்கி வருவார்.

## ஒரு திருத்தம்

பலரசக்கலசம் பகுதியில் இழந்த இராகம் என்ற விடயத்தில் கல்யாணி, தோடி ஆகிய இருஇராகங்களிலும் பக்திப்பாக்கள்பாடப்படவில்லை எனக்கொண்டு வாசிக்கவும். ஏற்பட்ட அச்சுப்பிழைக்கு வருந்துகிறோம்.

● ஏழை பணக்காரரோடு சேர்ந்தால். உடுத்த ஆடையும்இல்லாமல்திரிய வேண்டியதுதான்.

● சென்ற இதழில் 'லாவண்யா' எழுதிய ''மனோபாவம்'' எனும் கவிதைக்கு நாயன் மார்கட்டு மகேந்திரதாஸ் மறுப்பாய் மலர்கின்றார்.

## மாறட்டும் மனோ பாவம்

பாரதியே! மாகவியே;
உந்தனுக்கு
விழாவெடுத்தல்
'பொழுதுபோக்கெனவே',
உரைக்கின்றார் —
ஒருசிலர்தான்
தங்கள் கருத்தெமக்குப்
'புரியவில்லை' என்றுங்
கூறிடுவார்!
என்றாலும்—
உந்தனது கருத்துக்கள்
எந்த விளைவையுமே
தரவே இல்லையென
யார்தான் கூறிடுவார்?
பொழுதுதனைப் போக்குதற்கோ
போதிய வழிகளுண்டு
அதைவிடுத்து—
உந்தனுக்கா விழாவெடுப்பர்?
என்னே...?
உந்தன் கவிதைகளோ—
இன்றுந்தரிசு நில விதைகளாம்
ஐயோ
உண்மை அதுவென்றால் —
அவை என்றோ மண்ணோடு மண்ணாய்...!
நீமலர்ந்து—
நூற்றாண்டின் நினைப்பினிலே
உந்தன் சிந்தனையை
இளைய தலைமுறையும்
நன்றே அறிந்திடவும்
அதில் புதுமலர்கள் பூத்திடவும்
கவிஞர்க்கும்-கலைஞனுக்கும்
மதிப்பு உயர்ந்திடவும்—
—என்றெல்லாம்
விளைகின்ற பயன்களையே
விளங்கிடவே—
மாறட்டும் மனோபாவம்!

நாயன்மார்கட்டு
**ப. மகேந்திரதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா நண்பர்

- பேனா நண்பர்கள் பகுதியில் உங்கள் பெயரும் இடம்பெற வேண்டுமானால் கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபாலட்டையில் ஒட்டி அனுப்பவும்.

தங்களின் 'சிரித்திரன்' பத்திரிகை சிலஎனது நண்பன் ஒருவன் மூலமாக கிடைக்கப்பெற்று மிக்க பயனும் மகிழ்ச்சியும் அடைந்தேன். நான்வேறு திராவிட மொழியைப் பேசுபவனாக இருந்தாலும் தமிழில் கூடிய பற்றுடையவன். எந்தநாட்டில் எமது திராவிட மொழிப் புத்தகங்களோ, சஞ்சிகைகளோ கிடைத்தால் உடன் மகிழ்ச்சியோடு படிப்பேன். தங்கள் பத்திரிகையை படித்தவுடன் மேலும் உவகைகொண்டேன் பாரதத்தில் ''துக்ளக்'' போல் இலங்கையில் 'சிரித்திரன்' போன்றவை தமிழின ஒற்றுமையுடனும் தன்னைப்பற்றிய சிந்தனையுடனும் வழிநடக்க செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு அதிகளவு உண்டு. தங்கள் பணிதொடர்ந்து நடப்பதற்கு எனது மனந்திறந்த வாழ்த்துக்கள்.

**பி. தீவாகரன்**
T. Nagar

P. Thivakaran — Age 19
C/o K. R. Suresh
No. 21 Shambasivam st., T. Nagar
Madras 17, PIN 600017.
● மாணவன்
☐ பேனாநண்பர், பத்திரிகை, புகைப்படம்

K. Jeyadevanadam — Age 28
Cement works, P. O. Box: 5282 Ruwi
● Forman
☐ சித்திரம், வானொலி

ஞா. ஜெனிட்டா — வயது 21
29/1 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்
● மாணவி
☐ கதைப்புத்தகம்

த. சுந்தரலிங்கம் — வயது 17
மங்கள மாளிகை
புலோலி மேற்கு, பருத்தித்துறை
● மாணவன்
☐ வானொலி, T. V, பத்திரிகை

T. S. விஜயபாஸ்கரன் — வயது 19
97 மாதிரிக்கிராம வீதி, மத்துவில், கொடிகாமம்
● மாணவன்
☐ பத்திரிகை, பேனாநண்பர்

எஸ். நாகராஜா — வயது 26
செங்கடிப்புலவு, வவுனியா
● வீடமைப்பு திணைக்களம்
☐ வானொலி, கதை வாசித்தல்

எஸ். எம். எம். ரூபிக் — வயது 21
வட்டவிதானை வீதி, சாய்த மருது 04
● லிகிதர்
☐ வானொலி, முத்திரை, அறிவுநூல்

சு. பத்மநாதன் — வயது 24
155/5 பாபர் வீதி, கொழும்பு 13
● வியாபாரம்
☐ படம்பார்த்தல், கராட்டே, நண்பர், உதைபந்து

இ. யேசுதாசன் — வயது 24
வராத்துபளை, பருத்தித்துறை
● வர்த்தகம்
☐ வானொலி, பத்திரிகை, சினிமா

S. P. சாந்தரூபன் — வயது 18
சாந்த தோட்டம், ஆவரங்கால், புத்தூர்.
● மாணவன்
☐ வானொலி, T. V, பத்திரிகை


## சிரித்திரன்பேனா நண்பர்கழகம்

பெயர் ..................................................
விலாசம் ..................................................
..................................................
வயது.............. தொழில்..............................
பொழுது போக்கு..................................................
..................................................
கையொப்பம் ..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இ: 7



பெயர்..........................................................

முகவரி..........................................................

..........................................................

- சரியான விடைதரும் அதிஷ்டசாலிக்கு முதலாவது பரிசாக ரூபா**15**/- அன்பளிக்கப்படும்.
- 2வது பரிசாக ரூபா **10**/- அன்பளிக்கப்படும்.
- விடைகள் யாவும் **15-3-1982** ற்கு முன்பு குறுக்கெழுத்துப்போட்டி, ஆசிரியர் சிரித்திரன் 559. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
- கூப்பனின்றி அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

---

## இல 6. குறுக்கெழுத்துப் போட்டி விடை

**மேலிருந்து கீழ்:**

1. குத்தகை 2. துகில் 3. விடை 4. குதி
5. சம்பவம் 8. நடல் 9. இல்லை 11. கித்திரம்
13. புதிது 14 சிங்கம் 15. கைகண்ட 17. புதுமையாய்

**இடமிருந்து வலம்:**

1. குத்துவிளக்கு 6. கிடை 7. திடம் 8. நதி
10, மடல் 12. எல்லை 13. புத்தி 14. சிகை
16. திதி 17. புருவங்கள் 18. கண் 19. மைனு

### இடமிருந்து வலம்:

1. இதை எவரும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.
4. எதற்கும் ஒரு இதுவேண்டுமல்லவா?
7. ...... என உற்சாகப்படுத்திய தாயை மகன் காதிற் கடித்தான்.
8. ...... இல்லாத மனிதர்கள் சிக்கலில் மாட்டிக்கொள்வார்கள்.
9. நல்ல ......... எல்லோருக்கும் கிடைக்குமா!
11. புத்தியில்லாத ஒருவனைத் ...... இல்லாதவன் என்று சிலர் சொல்லுகிறுர்களே.
12. சிறு......ம் உதவலாமல்லவா!
15. இப்போதைய ...... உணவு மிகவும் செலவானது.
16. இக்கால உயர் விஞ்ஞான மாணவர்கள் இதைப் பற்றி நன்கு அறிந்தே ஆகவேண்டும்.
17. ...... வாய்க்கப்பெற்றவர்களின் மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா!
18. வாசகர்களின் ......... எமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது.
19. .........இல்லாத காரியம் எது.

### மேலிருந்து கீழ்:

1. இது ஒரு இனிப்பான மூலிகை
2. ...... என ஒரு ஆண்மகனின் நாமத்துக்குமுன் எழுதுதல் நம்மரபு.
3. இது பெருஞ்செல்வத்தின் ஒருவகையல்லவா?
4. யானைத்........... பெறுமதி மிக்கது.
5. மழலைச்சொல்.
6. இது சிறுதானிய வகையைச் சேர்ந்தது.
10. மாணவர்கள் இதான விடைகளை எழுதப் பழகுதல் வேண்டும்.
13. பெருந் .........யை உலகம் விரும்புகிறது!
14. நல்ல ......... உள்ளவனே செல்வந்தன்.
15. அர்ச்சுனனும் இவன்தான், பார்த்திபனும் இவன் தான்.
16. ......கள் எல்லா நாட்டிலும் ஒரே மாதிரியாக அமைக்கப்படுவதில்லை.
18, சிலபெண்களே தங்கள் ...... யைக் கட்டுப்படுத்துவார்கள்.

### பரிசு பெற்றோர்

- அன்பு வாசகர்களே! சென்ற இதழ் போட்டியில் அச்சில் சிறுபிழை ஏற்பட்டுவிட்டது, வருந்துகிறோம். அதனையும் சரியான முறையில் திருத்தி எமக்கு பல நேயர்கள் அனுப்பியுள்ளனர் நன்றி.

**1**வது பரிசு ரூ. **15** தைப் பெறுபவர்:

**சுவாமிநாதன்**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு,

**2**வது பரிசு ரூ. **10** பெறுபவர்:

**வ. பேரின்பராசா**
3ம் வட்டாரம், அனலை தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசையால் வசமாகா இதயமெது!

- உங்களை மெய்மறக்கச் செய்யும் கர்னாடக இசை மேதைகளின் கச்சேரிகள்.
- திரைஇசைப் பாடல்கள்
- பக்திப்பாடல்கள் • தனிப்பாடல்கள்

அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம்துல்லியமாக ஒலிப்பதிவு செய்துதருவதிலும்.
ரேடியோ — ரேப்ரெக்கோர்டர்கள் தொலைக்காட்சிப்பெட்டிகள் அனைத்தையும் திருத்தப் செய்வதிலும்
விற்பனை செய்வதிலும் முன்னிலையில் திகழ்பவர்கள்.

# ரேடியோஸ்பதி

**58 கஸ்தூரியார் வீதி,** **யாழ்ப்பாணம்**

தொலைபேசி: **7895**

---

## தங்கரதம் வந்தது வீதியிலே!

தமிழன்னை...
கழுத்திலே "சிந்தாமணி" ஆரத்தையும்
காதிலே குண்டலகேசி அணியினையும்
கைகளில் வளையாபதி காப்பினையும்
இடையில் மணிமேகலை அணியினையும்
காலில் சிலப்பதிகாரத்தையும் அணிந்து

காப்பியநாயகியாய் என்றும் குன்று
இளமையளாய் தோன்றுகின்றாள்...

நீங்களும் குறையாத அழகும் குன்றாத இளமையும் பெற நாடுங்கள்

### தங்க - வைர நகைகளுக்கு

# ஸ்யாமளா நிகேதனம்

### நகைமாளிகை

**246, கஸ்தூரியார் வீதி,** **யாழ்ப்பாணம்**

தொலைபேசி: **7501**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர்: அந்தத் தாமரைக் குளத்தில் வெண்டாமரைகள் தென்றலுக்கு ஆடுவதைப் பார்த்ததும் ஒருநினைவு வந்தது.

நிருபர்: என்ன நினைவு?

கவிஞர்: வெண்ணிற உடை அணிந்த கிரிக்கட்ஆட்ட வீரர்கள் பசும்புற் தரையில் கிரிக்கட் ஆடும்நினைவு

நிருபர்: அவர்களின் உடை வெள்ளைவெளேரென இருப்பதின் மர்மம் என்ன?

கவிஞர்: அவர்கள் உடைகளைச் சலவை செய்யப் பாவிப்பது மில்க்வைற் சலவைப்பவுடரே!

---

துரிதமான, தூய்மையான

சலவைக்கு

மில்க்வைற் சலவைப்பவுடர்

பாவியுங்கள்




# மில்க்வைற் - யாழ்ப்பாணம்

525-52 காங்கேசன்துறை வீதி

தொலைபேசி: 7233

தந்தி: 'மில்க்வைற்'

பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவுஇலக்கம் பி. கியூ 59/300 559, கே. கே. எஸ். வீதியில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 559, கே. கே. எஸ். வீதியிலுள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org